விலை ரூபா 40

பக்கங்கள் - 12

06.01.2025 - திங்கட்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 63 குரோதி வருடம் மார்கழி மாதம்
22 ஆம் திகதி - ஹிஜ்ரி 1446 ரஜப் 06




## விடுமுறையின் பின் நீதிமன்ற பணிகள் இன்று ஆரம்பம்!

(முகம்மட் முக்தார்)



நீதிமன்றங்களின் 2024 டிசம்பர் மாத பருவகால விடுமுறைக்கு பின்னர் நாடளாவிய ரீதியிலுள்ள நீதிமன்றங்களின் 2025 ஆம் ஆண்டுக்கான திறந்த நீதிமன்ற நடவடிக்கைகள் இன்று(06) ஆரம்பமாகிறது.

இதற்கமைய ஆரம்ப நீதிமன்றங்கள், நீதவான் நீதிமன்றங்கள் 06 ம் திகதியாகிய இன்றும் மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் மாகாண மேல் நீதிமன்றங்கள் 08 ஆம் திகதி புதன்கிழமையும் திறந்த நீதிமன்ற செயற்பாடுகளுக்காக ஆரம்பமாகின்றன.

02

## புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தம் 08 ம் திகதி ஆரம்பம்!



பெரும் சர்ச்சைக்குள்ளான 2024 ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் நாளை மறுதினம் 08 ஆம் திகதி ஆரம்பமாவதாக பரீட்சைத்திணைக்களம் அறிவித்து ள்ளது.

இப்பரீட்சைக்கான விடைத்தாள் திருத்தும் பணிகளை ஒரு வாரகாலத்தினுள் திருத்த எதிர்பார்த்துள்ளதாகவும் மூன்று வார காலத்திற்குள் பரீட்சை முடிவுகளை வெளியிட

02

# இணைந்த வடக்கு-கிழக்கில் சுயாட்சி மாநிலம் வேண்டும்

## அரசியலமைப்பை கொண்டுவந்தால் ஆதரவு வழங்கத் தயார்

### வலியுறுத்துகிறது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

(கி. வசந்தன்)

வடக்கு – கிழக்கு இணைந்த ஒரு மாநிலமாக தமிழ் மக்கள் சுயாட்சியுடன் வாழக்கூடிய அரசியலமைப்பை புதிய அரசாங்கம் உருவாக்க வேண்டும். அத்துடன் மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்தி அதற்கான அதிகாரங்களை முழுமையாக வழங்க வேண்டும் எனவும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நேற்று (05) காலை முதல் மாலை வரை இடம்பெற்றது. இதன் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

02







கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் சனிக்கிழமை (04) இடம்பெற்ற பூஜையில் சபாநாயகர் ஜகத் விக்ரமரட்ன கலந்துகொண்டார். கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆலய அறங்காவலர் கிருஸ்ணமூர்த்தி, கலாநிதி பி.பி. சிவப்பிரகாசம் ஆகியோர் இப்பூஜையில் கலந்துகொண்டனர்.

(வசந்த குமார், கண்டி நிருபர்)

## அதானி காற்றாலை திட்டம்: அமைச்சரவையில் இன்று

(கனூஷியா புஷ்பகுமார்)

இலங்கையில் அதானியின் காற்றாலை திட்டங்களை பரிசீலிக்க குழுவொன்றை நியமிப்பதற்கான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

அதன்படி, இன்று திங்கட்கிழமை (6) நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த யோசனை முன்வைக்கப்படவுள்ளது.மன்னார் மற்றும் பூநகரி பிரதேசங்களில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காற்றாலை மின் திட்டங்கள் தொடர்பிலேயே இந்த பிரேரணை சமர்ப்பிக்கப்பட உள்ளது. மன்னார் மற்றும் பூநகரி பிரதேசங்களில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காற்றாலை

02

## ரணில் - சஜித் இணைக்க புதிய வியூகம்: கரு மத்தியஸ்தம்



(கனூஷியா புஷ்பகுமார்)

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அதன் தாய்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை மீள இணைக்கும் செயற்பாட்டிற்காக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவை இணைத்துக்கொள்ள வேண்டும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் சில உறுப்பினர்களிடையே கொழும்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகிய வேட்பாளர்கள் இருவரும் தோல்வியடைந்ததால் மீண்டும் தீர்க்கமான ஒரு அரசியல் வெற்றியை பெற வேண்டுமானால் இந்த இரண்டு கட்சிகளும் இணைய வேண்டும்

02

## காசாவில் உணவு நெருக்கடி: 91 வீதமான மக்கள் பேரவலம்

(கனூஷியா புஷ்பகுமார்)



இஸ்ரேல்– பலஸ்தீன போர் நிலைமை காரணமாக காசாவில் 91 வீதமான மக்கள் பாரிய உணவு நெருக்கடியை சந்தித்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போரால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வறுமையை நீக்குவதற்கான விரைவான நடவடிக்கைகளை மேற்கொள் ளுமாறு உலகளாவிய உணவு பாதுகாப்பு நிபுணர்கள் கோரிக்கை விடுத்திருந்தாலும் கூட இஸ்ரேலின் மதவாதம் கொண்ட நடைமுறை காரணமாக காசாவிற்கு உதவிகள் வழங்குவதில் நெருக்கடியான நிலை காணப்படுகிறது.

02

## துமிந்தவுக்கு சிறைச்சாலையில் விசேட வசதிகள்...?

ஆர்.மனோசங்கர்



மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள துமிந்த சில்வாவுக்கு சிறைச்சாலை வைத்தியசாலையில் விசேட வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகளை மறுத்துள்ள சிறைச் சாலை திணைக்களம், துமிந்த சில்வா சிகிச்சை பெற்று வரும் விடுதியின் புகைப்படங்களை ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளது.

02

## கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்துக்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் எதிர்ப்பு

(கனூஷியா புஷ்பகுமார்)



பேருந்துகளில் பொலிஸார் மூலம் மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகளினால் ஏற்படும் சிக்கல்கள் குறித்து கலந்துரையாட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் வாரத்தில் பதில் பொலிஸ் மா அதிபருடன் இது தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும் வரையில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் எதிர்வரும் வாரத்தில் முன்னெடுக்கவுள்ள பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் என அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

02

## திட்டமிடல் சேவை நேர்முகப் பரீட்சைக்கு 349 பேர் தகுதி: இனவிகிதாசாரம் இல்லை

(முகம்மட் முக்தார்)

அகில இலங்கை சேவைகளான இலங்கை நிருவாக சேவை, இலங்கை திட்டமிடல் சேவைகளுக்காக கடந்த வருடம் நடாத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சைகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைகளுக்கு தோற்ற தகுதியானோரின் பெயர்ப்பட்டியலை பொதுநிருவாக அமைச்சு வெளியிட்டுள்ளது.

02

## 2024: துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களால் 61 பேர் உயிரிழப்பு, 47 பேர் படுகாயம்

-ஆர்.மனோசங்கர்-




கடந்த ஆண்டு 100க்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 61 பேர் கொல்லப்பட்டதுடன், 47 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டில் நடந்த பெரும்பாலான துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இருந்துள்ளதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த ஆண்டு பதிவான 103 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 56 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடையவை எனவும் இதில் 45 பேர் உயிரிழந்துள்ளதாகவும்

02

## காட்டு யானைகளால் திருமலை பன்குளம் மக்கள் பதற்றத்தில்





(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை பன்குளம் மற்றும் அவ்வை நகர் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

யானை மின் வேலிகள் பொருத்தப்பட்டிருக்கின்ற போதிலும், சிறந்த முறையில் பராமரிக்கப்படாமையினால் யானைகள் கிராமத்துக்குள் உட்புகுந்து விவசாய நிலங்களை சேதப்படுத்தி வருவதுடன் வீட்டுத்தோட்ட பயிர்களையும் சேதப்படுத்தி வருவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

02

மனிதத்தின் குரலாக - உங்களில் ஒருவனாக: ஒருவன்

# மின்சாரம் தாக்கி இறந்த யானையை வெட்டி குளத்தில் வீசிய 3 இராணுவ வீரர்கள் கைது

கி.வசந்தன்

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் இராணுவ முகாமில் மின்சாரம் தாக்கி இறந்த யானையைத் துண்டு துண்டாக வெட்டி குளத்தில் வீசியதாக மூன்று இராணுவ வீரர்கள் வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, ஓமந்தை, கொம்புவைத்தகுளம் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் மின்சாரம் தாக்கி யானை ஒன்று கடந்த மாதம் இறந்துள்ளது. இறந்த யானையை இராணுவத்தினர் துண்டு துண்டாக வெட்டி குளத்திற்குள் வீசியதாகவும் அதன் உடற்பாகங்கள் குளத்தில் காணப்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவித்ததையடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த விசாரணைகளையடுத்து மூன்று இராணுவ வீரர்கள் நேற்று முன்தினம் (04) வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மூவரையும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

# சுண்ணக்கல் அகழ்வின் விளைவுகளுக்கு அரசாங்க அதிகாரிகளே பொறுப்பு

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் சந்திரசேகரன் எச்சரிக்கை

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுண்ணக்கல் அகழ்வின் விளைவுகளுக்கு அரச அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டும். இது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் கடும் தொனியில் தெரிவித்துள்ளார்.

யாழ்.தென்மராட்சியில் சட்ட விரோதமான முறையில் சுண்ணக்கல் அகழப்படுவதாகக் கூறப்படும் இடங்களை அமைச்சர் சந்திரசேகர் நேற்று (05) பார்வையிட்டார்.

தென்மராட்சிப் பிரதேசத்தின் சரசாலை வடக்கு மற்றும் மந்துவில் பகுதிகளில் சுண்ணக்கல் அகழப்பட்டுவரும் இடங்களுக்கு நேரில் சென்று ஆராய்ந்தார்.

அமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர் கணநாதன் இளங்குமரன் மற்றும் அதிகாரிகள் சிலரும் உடன் சென்றிருந்தனர்.





## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### விடுமுறையின் பின்...

உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பன திறந்த நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் 15ம் திகதியும் ஆரம்பமாவதாக நீதிச்சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

### புலமைப்பரிசில் பரீட்சை..

எதிர்பார்ப்பதாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 24 ம் திகதி நடைபெற்ற மேற்படி பரீட்சையின் முதலாம் வினாத்தாளின் 03 வினாக்கள் பரீட்சை நடக்குமுன்னரே நொச்சியாகம பிரதேச பரீட்சை மண்டபமொன்றில் இருந்து வெளியாகியது.இந்த வினாக்கள் கசிந்த விவகாரத்தில் தேசிய கல்வி நிறுவக திட்டமிடல் பிரிவின் பணிப்பாளரும், பரீட்சை மண்ட மேற்பார்வையாளர் உட்பட ஆறுபேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இது தொடர்பாக விசாரணை செய்த பரீட்சைத் திணைக்களம் கசிந்த வினாக்களுக்கு சகல மாணவர்களுக்கும் இலவச புள்ளிகளை வழங்க தீர்மானித்து விடைத்தாள்களை திருத்த முற்பட்ட சமயம் பெற்றோர்களின் ஆர்ப்பாட்டம், ஜனாதிபதியின் உத்தரவு காரணமாக அப்பணி இடைநிறுத்தப்பட்டது.

இதுசம்பந்தமாக நான்கு மாணவர்களின் பெற்றோர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்தனர். இவ்வழக்கில் விடைத்தாள் திருத்தத்திற்கும் பரீட்சை முடிவுகளை வெளியிடவும் இடைக்கால தடை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து கடந்த 31 ம் திகதி இது தொடர்பான தீர்ப்பு உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் விடைத்தாள் திருத்தும் பணிகள் 08 ம் திகதி ஆரம்பமாக உள்ளது.

### அதானி காற்றாலை...

மின் திட்டங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின் அலகு ஒன்றுக்கு 8.26 அமெரிக்க டொலர் வீதம் செலுத்துவதற்கு கடந்த அரசாங்கத்தின் அமைச்சரவை இணக்கம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், குறித்த உடன்படிக்கையை மீளப்பரிசீலனை செய்வதற்காக இந்த குழு நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. திட்டங்களுக்காக மதிப்பிடப்பட்ட செலவுகள் உள்ளிட்ட காரணிகளை குழு மதிப்பாய்வு செய்யவுள்ளது. இதற்கு முன்னரும் கூட இந்தத் திட்டங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

மன்னார் மற்றும் பூநகரி ஆகிய இடங்களில் முன்மொழியப்பட்ட காற்றாலை மின் திட்டங்கள் மொத்தம் 484 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இயற்கை சமநிலை கெடும் என்ற வாதத்தை முன்வைத்து, மன்னாரில் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்துக்கு பொதுமக்கள் தொடர்ந்தும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

எவ்வாறாயினும், இலங்கையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால், அதானி காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் இரத்து செய்யப்படும் என்று தற்போதைய ஜனாதிபதி, அப்போது வேட்பாளராக இருந்த சந்தர்ப்பத்தில் வாக்குறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ரணில் - சஜித்...

என அந்தந்த கட்சிகளிடையே உள்ளக கலந்துரையாடல்கள் எழுந்துள்ளன.

இரண்டு அரசியல் கட்சிளையும் இணைப்பதற்கான அடிப்படை கொள்கைகள் மற்றும் கட்சி சின்னங்கள் போன்ற காரணிகள் தொடர்பில் பின்னர் கலந்துரையாட வேண்டும் எனவும் இவ்விடயங்களை இரண்டு தரப்பினரிடமும் தொடர்புகொள்ள இருக்கும் ஒரே நடுநிலை அரசியல்வாதி கரு ஜயசூரிய எனவும் அங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதன்படி, வெகு விரைவில் கரு ஜயசூரியவுடன் இணைந்து குறித்த காரணிகள் தொடர்பில் முறையான கலந்துரையாடல்களை மேற்கொண்டு இணைந்த கூட்டணி ஒன்று உருவாக்கப்படும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

### 2024: துப்பாக்கிச்...

பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். ஏனைய 47 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 16 பேர் கொல்லப்பட்டனர். வெவ்வேறு காரணங்களால் குறிப்பாக தனிப்பட்ட தகராறுகளால் இவை நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

2024 ஆம் ஆண்டில் பதிவான கடைசி துப்பாக்கிச் சூட்டு சம்பவம் டிசம்பர் 28 ஆம் திகதி மாலையில் பதிவாகியிருந்தது. சீதுவ பகுதியில் உள்ள ஒரு வீட்டில் காரில் வந்த அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.இதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்தனர். தந்தை மற்றும் அவரது இரண்டு மகன்களை இலக்கு வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸார் விவரித்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டில் பல பெரிய துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் நடந்துள்ளன. அவற்றுள் சில பட்டப்பகலில் நடந்தன. துப்பாக்கி ஏந்தியவர்கள் பொது மக்கள் முன்னிலையில் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாகவும் பொலிஸ் அறிக்கைகள் குறிப்பிட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஜனவரி 22 அன்று தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பெலியத்த வெளியேறும் இடத்திற்கு அருகில் ஐந்து பேர் கொல்லப்பட்ட சம்பவம் மிகவும் பாராதூரமான ஒன்றாகும். இந்த சம்பவத்தில் "நமது மக்கள் சக்தி" என்ற கட்சியின் தலைவர் சமன் பெரேராவும் கொல்லப்பட்டார்.

மேலும், ஜூலை 8 ஆம் திகதி, அத்துருகிரியவில் ஒரு அழகு நிலையம் திறப்பு விழாவில் தொழிலதிபர் சுரேந்திர வசந்த பெரேரா என்று அழைக்கப்படும் "கிளப் வசந்த" உட்பட இரண்டு பேர் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்தில் பிரபல பாடகி கே. சுஜீவா உட்பட நான்கு பேர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு ஆளானார்கள். இவ்வாறான சில துப்பாக்கிச் சூடுகள் சிசிடிவியில் பதிவாகியுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பெரும்பாலான துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடித்து கைது செய்வதில் பொலிஸார் வெற்றி பெற்றுள்ளதாக, பொலிஸ் ஊடகப்பேச்சாளர் கே.புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பாக 50க்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக அவர் மேலும் கூறினார். ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

2024ஆம் ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில் மட்டும் இதுபோன்ற துப்பாக்கிச் சூடுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட மூன்று ரி-56 ரக இயந்திர துப்பாக்கிகளை மீட்டுள்ளதாகவும், ஒட்டுமொத்தமாக, கடந்த ஆண்டு 20 ரி-56 துப்பாக்கிகளை மீட்டெடுக்க முடிந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டில் துப்பாக்கிச் சூடு சம்பவங்களின் எண்ணிக்கை முந்தைய ஆண்டை விடக் குறைவாக பதிவாகியிருந்ததாகவும், 2023 ஆம் ஆண்டில், 120 துப்பாக்கிச் சூடுகளில் 54 பேர் கொல்லப்பட்டதுடன், 65 பேர் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தும்மிந்தவுக்கு...

தும்மிந்த சில்வா சிறைச்சாலை வைத்தியசாலையின் விடுதி இலக்கம் 3 இல் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாகவும், 50க்கும் மேற்பட்ட கைதிகள் அங்கு சிகிச்சை பெற்று வருவதாகவும் சிறைச்சாலை ஆணையாளர், ஊடகப் பேச்சாளர் காமினி பி. திஸ நாயக்க கூறுகிறார்.

தும்மிந்த சில்வாவை முதலில் சிறைச்சாலைக்கு மாற்றிய போது சிகிச்சை அளித்த விசேட வைத்தியரின் ஆலோசனையின் பேரில் அவரை மருத்துவ கண்காணிப்பின் கீழ் சிகிச்சை அளிக்குமாறு ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் பணிப்பாளர் பரிந்துரை செய்ததாக ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தும்மிந்த சில்வா தற்போது சிறை வைத்தியர்களின் கண்காணிப்பில் உள்ளார். அவர் தொடர்ந்தும் சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற வேண்டுமா என்பது தொடர்பில் சிறைச்சாலை திணைக்களம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் முறையான விளக்கங்களை கேட்டுள்ளதாக ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். நிலைமையை மதிப்பிடுவதற்கு மருத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் சிறைத் திணைக்களம் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

கடந்த காலங்களில் தும்மிந்த சில்வாவுக்கு விசேட வசதிகள் வழங்கப்படுவதாக விமர்சனங்கள் வெளியாகியிருந்தன. அந்தச் செய்தியை வன்மையாக நிராகரிப்பதாகவும், இந்தக் கைதிக்கு அவ்வாறான விசேட வசதிகள் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பி. திஸாநாயக்க வலியுறுத்துகின்றார்.

இவ்விடயம் குறித்து அறிய இரண்டு முதற்கட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இட ஆய்வுகள் மற்றும் முதற்கட்ட விசாரணை அறிக்கைகளின்படி, குறித்த கைதிக்கு தனியான கழிவறையோ அல்லது விசேட வசதியோ செய்து கொடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### திட்டமிடல் சேவை...

வெளியிடப்பட்டுள்ள பட்டியலின் அடிப்படையில் இலங்கை நிருவாக சேவைக்கு 204 பேர் நேர்முக பரீட்சைக்கு தோற்ற தகுதி பெற்றுள்ளனர். இவர்களுள் 16 பேர் தமிழ், முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இலங்கைத் திட்டமிடல் சேவைக்காக 145 பேர் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற தகுதி பெற்றுள்ளனர். இவர்களுள் 05 பேர் தமிழ், முஸ்லிம் இனங்களைச் சேர்ந்தோராவர்.

இலங்கை நிருவாக சேவை, இலங்கை திட்டமிடல் சேவைகளுக்காக மொத்தம் 349 பேர் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள நிலையில் வெறும் 21 சிறுபான்மை இனத்தவர் மட்டுமே இரு சேவைகளுக்குமான நேர்முக பரீட்சைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளமை குறித்து சிறுபான்மை சமூக ஆர்வலர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

பொது நிருவாக அமைச்சின் 15/1990 ம் இலக்க சுற்றுநிருபப்படி ஆட்சேர்ப்புக்கு இனவிகிதாசாரம் பின்பற்றப்பட வேண்டும். எனினும் உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கொன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கமைய பதவிஉயர்வுக்காக மட்டும் மேற்படி சுற்றுநிருப ஏற்பாடுகளில் வசதி இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையில் தற்போது வெளியிடப்பட்டுள்ள நேர்முக பரீட்சை பட்டியலின் அடிப்படையில் இலங்கை நிருவாக சேவையில் நேர்முகப்பரீட்சைக்காக 40 பேரும், இலங்கை திட்டமிடல் சேவைக்காக 25 பேரும் அழைக்கப்படல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

### இணைந்த வடக்கு...

இந்த கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், கோ.கருணாகரம், எம்.கே.சிவாஜிலிங்கம், ந.சிறிகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் ப.வேந்தன், பவான் உட்பட முக்கிஸ்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

பேச்சாளரும், முன்னாள் எம்பி சுரேஸ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த தேர்தல் தொடர்பாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் இரண்டு தடவை இணைய வழி ஊடாக பேசியுள்ளோம். இன்றைய கூட்டத்தில் வரவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் பேசினோம். அத்துடன் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியை கிராம மட்டங்களில் பலப்படுத்தல் தொடர்பாகவும் பல்வேறுபட்ட ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

முக்கியமாக எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியாக தற்போது அங்கம் வகிக்கும் 5 கட்சிகளும் போட்டியிடும். அத்துடன் எம்முடன் இணைந்து பயணிக்கக் கூடிய ஏனைய தமிழ் தேசியக் கட்சிகளுடனும் பேசி அவர்களும் இணங்கும் பட்சத்தில் இணைந்து போட்டியிடவுள்ளோம்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ்தேசியப்பரப்பில் அங்கம் வகிக்கின்ற தமிழ் கட்சிகளுடன் இது தொடர்பில் பேசுவதாகவும் தீர்மானங்களை எடுத்துள்ளோம். அத்துடன் எதிர்வரும் பெப்ரவரி முதலாவது வாரத்தில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் மாநாட்டை வவுனியாவில் நடத்த தீர்மானித்துள்ளோம். அதற்கு முன்னதாக மாவட்ட நிறைவேற்றுக் குழுக்கள் கூடி என்ன விடயங்கள் பேசப்பட வேண்டும் எனவும் தீர்மானிப்பார்கள். அதற்கான நடவடிக்கைகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிய ஒரு அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த வேண்டிய தேவையும் பொறுப்பும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்கு இருக்கிறது. தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் சரியான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் நாம் ஆணித்தரமான கருத்துக்களை கொண்டிருக்கின்றோம்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டிருக்கும் புதிய அரசாங்கம் ஒரு மாற்றத்தை உருவாக்கப் போவதாக சொல்லியிருக்கிறது. தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினையை தீர்க்கக் கூடிய மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பது எம் மக்களது கருத்தாக இருக்கிறது. அந்த அடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் கூட ஒரு மாற்றம் ஏற்படும் என்பதற்காக தான் அந்த வாக்குகளும் அளிக்கப்பட்டதாக நாங்கள் கருதுகிறோம்.

கடந்த 75 வருடங்களில் புரையோடிப் போயுள்ள பிரச்சினையாக தேசிய இனப்பிரச்சினை இருக்கிறது. அது தீர்க்கப்பட வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு புதிய அரசாங்கத்திடம் இருக்கிறதா என்ற கேள்வியும் எம்மிடம் இருக்கிறது. கடந்த 7 வருடங்களாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை. மாகாணசபை தேர்தல் என்பது இந்த வருட இறுதியில் நடத்தப்படும் என கூறுகிறார்கள்.

உள்ளூராட்சி தேர்தல் நடந்து முடிந்து ஓரிரு மாதங்களில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என நாம் நம்புகின்றோம். மாகாணசபைக்கு உரித்தான 1988 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியல் சாசனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து அதிகாரங்களும் மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும். இந்த அரசாங்கம் மிக விரைவாக அந்த நடவடிக்கைகளை எடுத்தால் மாத்திரமே தமிழ் மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்கக் கூடிய ஒரு சூழல் ஏற்படும் எனவும் நாம் கருதுகின்றோம்.

ஆகவே, அரசாங்கம் வெறுமனே பேச்சில் மாத்திரம் இருக்காமல் தமிழ் மக்களது அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு ஒரு புதிய அரசியல் சாசனம் கொண்டு வர வேண்டும். அது வெறுமனே சிங்கள மக்களது பிரச்சினையை தீர்ப்பதாக இல்லாது புரையோடிப் போயுள்ள தமிழ் மக்களது தேசிய இனப் பிரச்சினையை தீர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

புதிய அரசியல் சாசனத்தை உருவாக்குவது தொடர்பாக அரசாங்கம் சரியான அறிவிப்புக்களை வெளியிடுவதாக இருந்தால் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியானது அனைத்து தமிழ் தேசியக் கட்சிகளுடன் இணைந்து தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு தமிழ் மாநிலத்தை உருவாக்கி முழுமையான சுயாட்சியை உருவாக்குவதற்கான கருத்துக்கள் அல்லது அறிக்கைகளை எல்லோருடனும் இணைந்து புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கும் குழுவிடம் கொடுப்போம். முதலாவது இந்த அரசாங்கம் குழுவை நியமிக்க வேண்டும்.

புதிய அரசியல் சாசனம் உருவாக்கும் பட்சத்தில் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அத்துடன் மக்கள் மத்தியில் வாக்கெடுப்புக்கும் விடப்பட வேண்டும். அவ்வாறு விடப்பட்டால் தான் அது நிறைவேறும். மக்கள் மத்தியில் சென்று அதற்கான ஆதரவை திரட்ட வேண்டுமாக இருந்தால் இந்த அரசாங்கம் விரைவாக புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும். அப்போது தான் சாத்தியமாகலாம். காலம் செல்ல ஆட்சியின் மீதும், ஆட்சி அதிகாரம் மீதும் பல்வேறு குறைபாடுகள் வரும். அதற்கு முன்பாக அரசியல் சாசனம் வர வேண்டும் என விரும்புகின்றோம்.

அதில் முக்கியமாக தமிழ் மக்களது தேசிய இனப் பிரச்சினைக்கு பாதிக்கப்பட்ட அந்த மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக, தமிழ் மக்கள் இந்த மண்ணில் முழுமையான சுயாட்சியோடு வாழ்வதற்கு தேவையான விடயங்களை உள்ளடக்கிய ஒரு அரசியல் சாசனமாக இருக்க வேண்டும் என நாம் பேசியுள்ளோம். இது தொடர்பில் ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுடன் பேசுவதற்கு தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

### காசாவில் உணவு...

காசாவில் விவசாய நிலங்களில் 68 வீதமானவையும் விவசாய கிணறுகளில் 52 வீதமானவையும் அழிவடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் உணவு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, காசாவில் 70 வீதமான மீன்பிடி கப்பல்கள் அழிவடைந்துள்ளதுடன் 95 வீதமான கால்நடைகள் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது உலகில் பல அழிவுகளுக்கு முகங்கொடுத்து வரும் பலஸ்தீனின் வடக்கு காசா பகுதியில் போர் காரணமாக 45,300க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதுடன் 107,764க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

### கிளீன் ஸ்ரீலங்கா...

தற்போதைய சூழலில் தனது தொழிலை நடத்துவதில் தாம் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளதாகவும், பொலிஸ் ா ராலோ அல்லது எவராலும் மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்திற்கு மேலாக செயற்பட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### காட்டு யானைகளால்...

இந்நிலையில் (03) அவ்வை நகர் தமிழ் கலவன் பாடசாலைக்கு மாணவர்கள் சென்றபோது பாடசாலை நுழைவாயிலில் யானை நின்றதாகவும் யானையை மாணவர்கள் விரட்டிய சம்பவமொன்றும் பதிவாகியுள்ளது.இது தொடர்பிலான காணொளிகளும் படங்களும் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

காட்டு யானைகளின் தொல்லை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் பிரதேச மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

# திரைப்பட இயக்குனர் பேராதனை ஜுனைதீன் காலமானார்



பிரபல திரைப்பட இயக்குநர், எழுத்தாளர் "ஷர்மிலாவின் இதயராகம்" புகழ் பேராதனை ஏ. ஜுனைதீன் (76 வயது) காலமானார்.

அன்னாரது ஜனாஸா, இல. 326, பெரகும்பா மாவத்தை, ரொசிலா கார்டன், அக்பர் டவுன்,ஹுணுபிட்டிய,வத்தளை எனும் இல்லத்தில் வைக்கப்பட்டு, நேற்று பி.ப. 4 மணியளவில் அக்பர் டவுன் ஜும்மா பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில் பணிபுரிந்த ஜுனைதீன், தமிழ் இலக்கியப் பரப்பில் பெரும் ஈடுபாட்டுடன் பணிபுரிந்தவர் ஆவார். அதே நேரம்,தமிழ்,சிங்கள சினிமா துறையில் பல படங்களின் தயாரிப்பாளராகவும் இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார்.

சிந்தாமணியில் எழுதிய தொடர்கதையை ஷர்மிலாவின் இதய ராகம் என்ற பெயரில் தமிழ்,சிங்கள மொழிகளில் திரைப்படமாகத் தயாரித்து இயக்கினார்.

ஜனாஸா நல்லடக்கத்தில் பெருந்திரளான, தமிழ் முஸ்லிம், சிங்கள கலைஞர்கள்,கல்விமான்கள் பங்கேற்றனர்.

### நாடாளுமன்ற உயர் பதவிகள்:

# வெளியிலிருந்து அதிகாரிகளை நியமிக்க தீர்மானம்

### ஊழியர்கள் கடும் எதிர்ப்பு

**(கனுஷியா புஷ்பகுமார்)**



நாடாளுமன்ற பதவிகளுக்கு வெளியிலிருந்து உயர் அதிகாரிகளை நியமிக்கும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு நாடாளுமன்ற ஊழியர்களிடமிருந்து கடும் எதிர்ப்பு எழுந்துள்ளதாக நாடாளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுவாக தற்போது பணிபுரியும் அதிகாரிகளின் பதவி உயர்வு முறைக்கேற்பவே அதிகாரிகளுக்கான பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இவ்வாறு வெளியிலிருந்து ஆட்களை பணிக்கு அமர்த்துவதால் நீண்டகாலமாக சேவை புரியும் அதிகாரிகளுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாக நாடாளுமன்ற ஊழியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நாடாளுமன்றத்தின் அரச நிர்வாக சேவையின் உயர் பதவிகளுக்கு இவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.அண்மையில், நாடாளுமன்ற உயர் அதிகாரிகளின் கலந்துரையாடலில் இவ்விடயம் தொடர்பில் விரிவாகப் பேசப்பட்டது

பொருளாதார பிரச்சினைகளை கருத்திற் கொண்டு நாடாளுமன்ற ஊழியர்களுக்கான விடுமுறை கொடுப்பனவை நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.இதற்கு ஊழியர்கள் தரப்பில் கடும் எதிர்ப்பு எழுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இக்கொடுப்பனவு பல ஆண்டுகளாக நாடாளுமன்ற ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உங்கள் ராசிபலன் எப்படி

**குரோதி வருடம் மார்கழி மாதம் 22ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்** இன்று கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரலாம்.

**ரிஷபம்** இன்று நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள்.

**மிதுனம்** இன்று உங்கள் மனதில் தெளிவு காணப்படும்.

**கடகம்** இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்** இன்று அதிருப்தியான நிலை காணப்படும்.

**கன்னி** இன்று உங்களுக்கு சாதகமான நாள்.

**துலாம்** இன்றைய நிகழ்வுகள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

**விருச்சிகம்** இன்று செயல்கள் சீராக நடக்க சாதகமாக இருக்காது.

**தனுசு** இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது.

**மகரம்** இன்று சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும்.

**கும்பம்** இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது.

**மீனம்** இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. பதட்டமான சூழ்நிலை கவலை அளிக்கும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று மாலை 06:56 வரை சப்தமி பின்பு அஷ்டடி.

**நட்சத்திரம்:** இன்று மாலை 07:53 வரை உத்திரட்டாதி பின்பு ரேவதி.

**யோகம்:** சித்த.

**சந்திராஷ்டமம்:** மகம்,பூரம்.

**சூலம்:** கிழக்கு.

**இராகு காலம்:** 07:30 AM முதல் 09:00 AM வரை.

**குளிகை:** 01:30 PM முதல் 03:00 PM வரை.

**எமகண்டம்:** 10:30 AM முதல் 12:00 PM வரை.

# மக்கள் நலன்களை உறுதிப்படுத்த நாடாளுமன்றம் செயல்படும்

### சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன

**(கண்டி நிருபர்)**

நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் நலனுக்கும் பாராளுமன்றம் வழிவகுக்கும். அதற்காக தாம் உட்பட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் உறுதியளிப்பதாக புதிய சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

இலங்கையில் புதிய சபாநாயகராக பதவியேற்ற கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன கடந்த சனிக்கிழமை கண்டிக்கு விஜயம் செய்து தலதா மாளிகையில் தனது சமய அனுஸ்டானங்களின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தமதுரையில்,

கணிசமான மற்றும் பலனளிக்கும் நாடாளுமன்றம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், தற்போது நாடாளுமன்றத்தில் செயற்பாடுகளை சிறந்த முறையில் நடாத்துவதற்கான குழுக்களை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார். அர்த்தமுள்ள விவாதங்களுக்கு திறந்து வைத்து



பொதுமக்களுக்கு உயர்தரமான சேவையை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும், சபாநாயகர் என்ற வகையில் அர்த்தமுள்ள விவாதங்கள் நிறைந்த மேடையை முன்வைக்க எதிர்பார்ப்பதாகவும் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன மேலும் தெரிவித்தார்.

இதன் பின்னர் கட்டுக்கலை செல்வவிநாயகர் ஆலயத்தின் சமய வழிபாடுகளில் கலந்துகொண்டார். கோயில் அறங்காவலர் கோவிந்த சாமி கிருஷ்ண மூர்த்தியின் வழிகாட்டலில் சமய நிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் மலையக அமைப்பாளரும் தேசிய சபை உறுப்பினருமான கலாநிதி சிவப்பிரகாசமும் கலந்துகொண்டார்.

### உலக வங்கியின் அனுசரணை வழங்கிய

# கல்வித் திட்டங்கள் தொடர்பில் பிரதமர் கலந்துரையாடல்



உலக வங்கி அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட கல்வி வேலைத்தி ட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் பிரதமர் கவனம் செலுத்தியுள்ளார்.

நாட்டின் பாடசாலை கல்வியை நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் உலக வங்கி அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தலைமையில் (03)இடம்பெற்றது. கடந்த பல வருடங்களாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலைகளை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், விசேடமாக பாடசாலை மாணவர்களின் சுகாதாரத்தை கட்டியெழுப்புதல் தொடர்பில் பிரதமர் இதன்போது தனது விசேட அவதானத்தை செலுத்தினார்.

அத்துடன் நாட்டின் இரண்டாம் நிலைக் கல்வியை முன்னிட்டு தகவல் தொழில்நுட்பத் துறையை மேம்படுத்துவது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

கல்வி, உயர் கல்வி பிரதியமைச்சர் வைத்தியர் மதுர செனவிரத்ன, கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ உள்ளிட்ட அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

# மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக இருவரை நியமிக்க அங்கீகாரம்

மேல் நீதிமன்ற நீதிபதிகளான கே.எம்.சரத் திசாநாயக்க மற்றும் பிரதீப் ஹெட்டியாராச்சி ஆகியோரை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக நியமிப்பதற்கு அரசியலமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இவ்விருவரின் பெயர்களும் அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டன. மேல் நீதிமன்ற நீதிபதிகளான திஸாநாயக்க மற்றும் ஹெட்டியாராச்சி ஆகியோர் அடுத்த வாரம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக பதவிப் பிரமாணம் செய்ய உள்ளனர்.

# வீட்டுத் திட்டங்களை மீள ஆரம்பிக்க வீடமைப்பு அமைச்சு நடவடிக்கை

இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தை மீண்டும் தொடங்குவதன் முக்கிய நோக்கம் ஒவ்வொரு தனிநபருக்கும் வீட்டு உரிமையை வழங்குவதாகும். இதன்படி, முன்னுரிமை அடிப்படையில் உரிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை, வீட்டு உரிமையில்லாத கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்கள் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 65,000 பேர் கொழும்பு நகர எல்லையில் வசிப்பதாக கூறப்படுகிறது. இதன்படி, சம்பந்தப்பட்ட பகுதிகளை உள்ளடக்கி வீட்டுத்திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்பட உள்ளன.

இதற்காக, குடிசனத் தொகை மற்றும் வீட்டுமனை கணக்கெடுப்பு தரவுகளை அடிப்படையாகக் கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# கொழும்பு பல்கலைக்கு சுமார் 16 கோடி நட்டம்

**(கனுஷியா புஷ்பகுமார்)**

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் மேற்கொண்டிருந்த ஒப்பந்தங்களை மீறிய 35 பேராசிரியர்களிடமிருந்து 15 கோடியே 99 இலட்சத்து 7,138 ரூபாய் மீள பல்கலைக்கழகத்துக்கு செலுத்தப்படவில்லை என தேசிய கணக்காய்வு அலுவலகம் பல்கலைக்கழகங்கள் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரியவந்துள்ளது. கலாநிதி பட்டங்களுக்காக வெளிநாடுகளுக்கு செல்லும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், குறித்த பட்டத்துக்காக செலவாகும் பணத்தை மீள செலுத்தாமல் பல்கலைக்கழக சேவையை மோசடியான ரீதியில் விட்டுச் செல்வதால் இவ்வாறு பல்கலைக்கழகத்திற்கு கடனை வைத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### கடவுச்சீட்டு பற்றாக்குறையால்

# அந்நிய செலாவணியை இழக்கும் அபாயம்!



இலங்கையில் நிலவிவரும் கடவுச்சீட்டு தட்டுப்பாடு காரணமாக அந்நிய செலாவணியை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தற்போது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் 750,000 கடவுச்சீட்டுக்களுக்கு மேலதிகமாக, புதிய கடவுச்சீட்டுக்களுக்கான கட்டளைகள் இன்னும் வழங்கப்படாத நிலையில், இந்த நெருக்கடி தொழிலாளர் இடம்பெயர்வை முடக்கும் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் எச்சரித்துள்ளது.

கொரிய மொழிப் பரீட்சையில் பங்கேற்க விரும்பும் விண்ணப்பதாரர்கள், பரீட்சையில் அமர கடவுச்சீட்டு எண்களை வழங்க வேண்டும் என்பதால், எதிர்வரும் வாரங்களில் கடவுச்சீட்டுக்களுக்கான விண்ணப்பங்கள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வகை தேவையை பூர்த்தி செய்ய சுமார் 30,000 கடவுச்சீட்டுகள் வழக்கமாக தேவைப்படுகின்றன.

இலங்கை தொழிலாளர்களுக்கான கோரிக்கைகளை மீண்டும் மீண்டும் நிறைவேற்றத் தவறினால், விரைவில் இலங்கை தொழிலாளர்களுக்கான வாய்ப்புக்கள் ஏனைய நாடுகளை நோக்கி திரும்பும் என்றும் பணியகம் எச்சரித்துள்ளது. அத்துடன் பாரிய அந்நிய செலாவணி இழப்பும் எமக்கு ஏற்படும்.

கடந்த ஆண்டு பதிவுசெய்யப்பட்ட 312,000 தொழிலாளர்களை விட இந்த ஆண்டு சுமார் 340,000 தொழிலாளர்களை அனுப்புவதே தமது இலக்காகும் என்றும் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

தினசரி வழங்கல் விகிதத்தைப் பொறுத்து, தற்போதுள்ள 750,000 கடவுச்சீட்டுக்கள், இந்த ஆண்டு ஜுலை மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடையில் தீர்ந்துவிடும்.

இது தொடர்பில், பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகள் மத்தியில் கூட்டம் ஒன்று அண்மையில நடைபெற்றது. இருப்பினும், உறுதியான தீர்வு எதுவும் எடுக்கப்படவில்லை.

ஏற்கனவே வெற்றுக்கடவுச்சீட்டுக்களை வழங்கி வந்த தேல்ஸ் டிஐஎஸ் பின்லாந்து மற்றும் அதன் இலங்கை நிறுவனமான ஜஸ்ட் இன் டைம் டெக்னாலஜிஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் ஆகியவற்றுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதால், இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

# திருகோணமலையில் உலக சமய தினம்

**(அப்துல்சலாம் யாசீம்)**

பல்வேறு மதங்களை பின்பற்றும் மக்களிடையே புரிந்துணர்வையும் , அமைதியையும் மேம்படுத்தும் நோக்கில் உலக சமய தினம் திருகோணமலையில் கொண்டாடப்பட உள்ளது.

யானா அறக்கட்டளை அமைப்பினால் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் திகதி இந்நிகழ்வு நகர சபை பிரதான மண்டபத்தில் காலை 09:00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. உலக மத தினம், ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது. இது பல்வேறு மத நம்பிக்கைகளுக்கு இடையே புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

யானா அறக்கட்டளை அமைப்பானது திருகோணமலையில் இந்த நிகழ்வை இரண்டாவது தடவையாக நடாத்தி வருவதுடன் , சமய உரையாடல் மூலம் அமைதி மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதற்கான அதன் பணியைத் தொடர்கிறது. இந்நிகழ்வில் மதத் தலைவர்கள், கல்வியாளர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் உட்பட பல்வேறு பேச்சாளர்கள் பங்கு பற்றவுள்ளதுடன், அவர்கள் மத நல்லிணக்கத்தின் முக்கியத்துவம் மற்றும் வெவ்வேறு நம்பிக்கைகள் பகிர்ந்து கொள்ளும் பொதுவான விழுமியங்கள் பற்றிய தங்கள் நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொள்வார்கள் எனவும் யானா அறக்கட்டளை அமைப்பினர் தெரிவித்தனர். இந்து மதம், பௌத்தம், கிறித்தவம், இஸ்லாம் மற்றும் பஹாய் மதத்தினர் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளதுடன் ஒவ்வொரு பாரம்பரியத்தின் செழுமையையும் அனுபவிக்க ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்கும், இந்த நம்பிக்கைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் கலாசார நிகழ்ச்சியைக் கொண்டிருக்கும்.

இந்த எழுச்சியூட்டும் நிகழ்வின் ஒரு பகுதியாக இருப்பதற்கும், அனைத்து மதங்கள் மீதும் புரிதலும் மரியாதையும் நிலவும் உலகிற்கு பங்களிக்க, ஜனவரி 19, 2025 அன்று திருகோணமலை நகர மண்டபத்தில் தங்களுடன் இணையுமாறு யானா அறக்கட்டளை அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

தகவல் தொழில்நுட்பவியலாளர் மு.மயூரன் தலைமையில் 08ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் "கலந்து அன்பாகிக் கசிந்து உள் உருகும் களம்" எனும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்க ஆயுள் உறுப்பினர் ஆ.சடாகோபன் உரையாற்றவுள்ளார்.

## ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com


## ரோஹிங்கியர்கள் விடயத்தில் மனிதாபிமானம் பேசட்டும்..!

சர்வதேச செயற்பாடுகளுக்கு இணங்கிச் செயற்படுவது அரசாங்கங்களுக்குள்ள பொறுப்பு. குறிப்பாக மனிதாபிமானத்துக்கு முதலிடம் வழங்கிச் செயற்படும் தர்மத்திலிருந்து, எந்த அரசுகளும் விலகிச் செயற்பட முடியாது. நாட்டு மக்களை உரிய அரசாங்கம் எப்படிக் கையாள்கிறது என்பதற்கான அளவு கோலாகவும் சில வேளைகளில், இந்த மனிதாபிமானச் செயற்பாடுகள் இருப்பதுண்டு.

உள் நாட்டு யுத்தங்கள் அல்லது கெடுபிடிகளின்போது,உயிருக்கு அஞ்சி நாட்டைவிட்டு தப்பியோடும் மக்களுக்கு அடைக்கலம் அளிப்பதென்பது, சர்வதேச சட்டங்களுக்கு, நியதிகளுக்குட்பட்டது. சொந்தங்களைத் துறந்து, சொத்துக்களை இழந்து இதுபோல எதிர்கால இலட்சியங்களை தொலைத்துத்தான், இவ்வாறு மக்கள் தப்பியோடுவதுண்டு. நமது நாட்டிலும் கடந்த காலங்களில், தப்பியோடிய அல்லது நாட்டை விட்டு வெளியேறிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கடல் வழியால் செல்லும் இந்தப் பயணங்களில் எந்தச் சொகுசுகளும் இருப்பதில்லை. உயிருக்குப் பயந்து வெளியேறிய நாம், கடலில் விழுந்து இறக்க நேரிடுமா என்ற அச்சத்தின் ஆதிக்கம் இவர்களை ஆட்கொண்டிருக்கும். மிகப் பயங்கரமான இந்த பயணம் பற்றி வார்த்தைகளால் விவரிக்க இயலாது. அந்த வகையில், இதன் வலிகளும் விளைவுகளும் எமது ஆட்சியாளர்களுக்கு புதியதல்ல.

மியன்மாரிலிருந்து அகதிகளுடன் புறப்பட்ட படகொன்று கடந்த 19 ஆம் திகதி முல்லைத்தீவு, முள்ளி வாய்க்கால் கடலில் கரையொதுங்கியது. 12 பணியாட்களுடன் 103 பொது மக்கள் இந்தப் படகில் புறப்பட்டிருந்தனர். வரும் வழியில் 6க்கு மேற்பட்டவர்கள் பலர் கடலில் உயிரிழந்துள்ளனர்.

குழந்தைகள், முதியவர்கள் மற்றும் கர்ப்பிணித்தாயார் ஒருவரும் இவர்களில் உள்ளனர். திக்குத்தடுமாறி,திசை தவறியே இந்தக் கப்பல் நமது நாட்டின் கடலில் கரையொதுங்கியது. இதிலிருந்த சகலரும் ரோஹிங்கிய முஸ்லிம்கள்.

யார் இவர்கள்? மியன்மாரின் இராக்கான் மாநிலத்தில் அதிகமாக வாழும் இவர்கள், 1971 பங்களாதேஷிலிருந்து வந்ததாகவும், பிரித்தானியரின் ஆட்சியில், குடியேற்றப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. பத்து இலட்சமாக உள்ள இம்மக்கள், தங்களுக்கு சுய ஆட்சி கோரி கடந்த 2012 ஆம் ஆண்டிலிருந்து போராடி வருகின்றனர் "அரக்கான் ரோஹிங்கிய இராட்சனியசேனை "என்ற ஆயுதக் குழு தலைமையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மொழி,மத மற்றும் இன உரிமைகளை சர்வதேச சட்டங்கள் உத்தரவாதப்படுத்தியுள்ளன.இந்த உரிமைகளில், ஒன்றைக் கோரியதாகவே இவர்களின் போராட்டம் அமைந்துள்ளது. ஆனாலும்,நியாயமான போராட்டங்களை மலினப்படுத்த அல்லது முடக்கிவைக்க, அரசுகள் அல்லது அமுக்கக் குழுக்கள் வழமையாக பயன்படுத்தும் தந்திரங்களே இம்மக்கள் மீதும் பிரயோகிக்கப்பட்டுள்ளன. மியன்மாரில் பெரும்பான்மையாக வாழும் பௌத்தர்களுக்கு எதிரான போராட்டமாக, இது சாயம்பூசப்பட்டுவிட்டது. இதனால்தான், ரோஹிங்கிய முஸ்லிம்கள் வன்முறைகளில் அகப்பட்டும் ராணுவ தாக்குதல்களுக்கு உள்ளாகியும் கடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இராணுவ ஜுண்டாக்களின் இரும்புப்பிடியில் சிக்கியுள்ள இந்த ரோஹிங்கிய முஸ்லிம்களின் நியாயங்கள், புரியப்படும் காலம் தூரத்தில் உள்ளதாகவே சந்தேகிக்கப்படுகிறது. அந்தளவுக்கு இம்மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு தலைகீழான அர்த்தம் கற்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கரை ஒதுங்கிய ரோஹிங்கிய அகதிகள், முல்லைத்தீவு முகாம் ஒன்றில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களை ஏற்பதா இல்லையா என்ற ஒரு சங்கட நிலையில் இலங்கை அரசாங்கம் இருக்கிறது. பௌத்தர்களுக்கு எதிராக போராடுகின்றவர்களை பௌத்த நாடாகிய இலங்கையில் ஏற்பதா..? என்ற கேள்வியும் எழுப்பப்பட்டிருக்கிறது.

இரு நாடுகளுக்கும் உள்ள மத ரீதியான உணர்வுகள் மனிதாபிமானத்தை மேவக் கூடிய சாத்தியமும் இருக்கிறது.

ரோஹிங்கே அகதிகளை பொறுத்த அளவில், அவர்கள் இலங்கையை இலக்கு வைத்து வரவில்லை. இலங்கையிலிருந்து மக்கள், இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்ற பொழுது, இன்னும் ஒரு நாட்டில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் இங்கு வருவார்கள் என்பதை எதிர்பார்க்க முடியாது. தாங்கள் வேறு ஒரு நாட்டுக்கு சென்ற போது வழி தவறி இங்கு வந்ததாகவே கூறுகின்றார்கள்.

உயிர்ப்பிச்சை தேடிப் புறப்பட்ட இம்மக்களை, மரணக் குழியில் தள்ளுவதைப்போலுள்ளது அரசாங்கத்தின் செயல். திக்குத் தெரியாமல், தஞ்சம் கோரி வந்தவர்களை, அவர்களது சொந்த நாட்டுக்கு அனுப்புவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. . பொருளாதார நெருக்கடியைக் காட்டியும், இவர்களுக்கு புகலிடம் வழங்குவது இன்னும் பலர் இங்கு வருவதற்கு வழி வகுக்கும் என அஞ்சியுமே இவர்களைத் திருப்பி அனுப்புவதற்கு அரசாங்கம் ஆலோசிக்கிறது.

அனுபவமில்லாத ஆட்சியாளர்கள் என்ற அர்த்தத்தை இது கொடுக்கப்போகிறதா? அல்லது மதத்தின் பிடியில்தான், இந்த அரசாங்கமும் செயற்படுவதை அடையாளப்படுத்தப் போகிறதோ தெரியாது. இவையிரண்டும் இல்லாவிடினும், சர்வதேசப் புரிதல்கள் இல்லாதவர்கள் என்ற கருதுகோளை நிச்சயமாக இது வெளிப்படுத்தும்.

எனவே, அரசாங்கத்துக்கு இவ்விடயத்தில் நிதானம் அவசியம். அபயம் தேடி வந்த மக்களின் மனநிலைகளை அறிந்து செயற்படுவதே, பொறுப்புள்ள அரசாங்கத்துக்குப் பெருமை. கடந்த கால ஆட்சியாளர்களால் ஏற்கனவே மழுங்கிப்போயுள்ள நமது நாட்டின் பெயரை நல்ல நிலையில், கொண்டு வருவதனால், ரோஹிங்கிய அகதிகளின் விடயத்தில் கருணை காட்டப்படல் அவசியம். யுத்தத்தை எதிர்கொண்டு அகதிகளின் அனுபவங்களைப் பெற்றுள்ள நாடு இலங்கை. எனவேதான், சர்வதேசத்துக்குப் படிப்பினையாகும் வகையில், அரசின் செயற்பாடுகள் அமைய வேண்டும். இவர்களைப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து, அரசாங்கம் செயற்படும் விடயங்கள் சகலதும் பாராட்டுக்குரியதே. ஆனாலும், அவசரத்தில் அல்லது அனுபவமின்றி தற்போது எடுக்கவுள்ள முடிவு ஆபத்தாக அமையாமலும் மனித தர்மத்துக்கு முரண்படாமலும் இருக்கட்டும்.

# மார்கழியில் மகிமை தரும் திருவெம்பாவை



திருவெம்பாவை விரதம் என்பது மார்கழி மாத திருவாதிரை நட்சத்திரத்துக்கு ஒன்பது நாட்களுக்கு முன் தொடங்கி இந்துக்களால் கடைப்பிடிக் கப்படும் விரதமாகும்..

இந்நாட்களில் அதிகாலை எழுந்து நீராடி சுத்தமான ஆடை அணிந்து கோயில் சென்று சிவகாமி உடன் இருக்கும் நடராஜரைக் கண்டு அங்கு நடைபெறும் வழிபாட்டில் பங்குபற்றுவர். விரதக் காலத்தில் ஒரு நேர உணவாக அவித்த உணவு மட்டுமே உண்பர்.

இந்த விரதத்தை கன்னிப் பெண்களே கூடுதலாகக் கடைப்பிடிப்பர். இக்காலத்தில் கன்னிப் பெண்கள் அதிகாலையில் எழுந்து தம் தோழியரையும் அழைத்துக் கொண்டு நீர் நிலைகளுக்குச் சென்று அம்மையப்பர் புகழ்பாடி நீராடுவர். இதனைக் கண்ணுற்ற மாணிக்கவாசகப் பெருமான் இ ந்நிகழ்ச்சியையே திருவெம்பாவையாக 21 பாடல்களாகப் பாடினார். இப்பாடல்களையே இன்றும் திருவெம்பாவைக் காலங்களில் கோயில்களில் பாடுவது வழக்கம்.

மாதங்களிலெல்லாம் சிறந்த மார்கழியை இறை வழிபாட்டிற்கே உரிய மாதமென்றே சொல்லலாம். வெள்ளத்தில் ஏற்படும் சுழியானது துவக்கத்தில் மெதுவானதாகவும், அதன் தன்மையை உணர்வதற்குள், மிக வேகமானதாகவும், ஆழ்த்திவிடுவதாகவும் உள்ள படுசுழியான தன் தன்மையைக் காட்டிவிடுகிறது. அதுபோல மயக்கத்தில், செல்லும் திசை தெரியாது ஆழச் செல்லும்



உயிர்களை உணர்வூட்டி, "கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே" என்ற பொன்னான வாசகத்தால் கைதூக்கி விடுவன திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும்.

திருவெம்பாவை மூலம் மணிவாசகப் பெருமான் நமக்குக் கூறும் உறுதியான அறிவுரை மற்றொன்றும் உண்டு. இப்பாடல்களில் வரும் பெண்கள் என்ன செய்கிறார்கள் ? ஒன்று கூடுகிறார்கள். அவர்கள் உய்யும் வகை உய்ந்த அடியார்கள்.

**மாதங்களிலெல்லாம் சிறந்த மார்கழியை இறை வழிபாட்டிற்கே உரிய மாதமென்றே சொல்லலாம். வெள்ளத்தில் ஏற்படும் சுழியானது துவக்கத்தில் மெதுவானதாகவும், அதன் தன்மையை உணர்வதற்குள், மிக வேகமானதாகவும், ஆழ்த்திவிடுவதாகவும் உள்ள படுசுழியான தன் தன்மையைக் காட்டிவிடுகிறது.**

அவர் தம் மனத்து இல்லம் தோறும் இறைவன் எழுந்தருளி இருப்பதால் என்ன குறையும் இல்லாதவர்கள். எனினும் ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ்சோதியைச் சுமக்கின்ற பரந்த மனமுடைய அவர்கள், இந்தப் பேரின்பப் பெருவழிக்கு வராது விடுபட்டுப் போன அக்கம்பக்கத்திலுள்ள தம் எல்லாத் தோழிகளின் துயில் மயக்கத்தைத் தெளிவித்து, அவருடைய உறுதியின்மையால் தாம் தளர்வுறாது, இறைவன் பால் ஒருமைப்பட்ட தம் மனத்தால் அவரையும் கண்ணுக்கினிய கருணைக் கடலான சிவபெருமானைப் பாடத் தேற்றுகின்றனர். இதுவே நமது இன்றைய தேவை. நாம் உய்யும் நெறியை உறுதியாகப் பற்றவேண்டும். அதே நேரத்தில் அவ்வாறு பற்றுவதால் நாம் பெறும் இன்பத்தை அண்டை அயலவர் எல்லோருக்கும் கிடைக்கும் வண்ணம், "எம்பிரான் மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே !" என அறைகூவி அழைத்தும், அறியாதவருடைய இல்லங்களுக்கே சென்று அவர் வாழ்வையும் அண்ணாமலையாரின்

# பேராதனை ஏ.ஏ. ஜுனைதீன் தமிழ் திரைப்பட படைப்பாளி

இலங்கையின் தமிழ்ப் பட தயாரிப்பாளரும், இயக்குநருமான பேராதனை ஏ. ஏ. ஜுனைதீன் நேற்று (05) காலமானார்.

இறக்கும்போது இவருக்கு வயது 72.

தினபதி – சிந்தாமணி பத்திரிகையில் நீண்ட காலம் பணிபுரிந்தவர். நாடக உலகில் ஆர்வமுற்றிருந்த இவர் திரைப்படத் துறையிலும் தன்னை இணைத்துக் கொண்டார். இலங்கையில் தயாரான பல ஆங்கிலப்படங்களில் பணியாற்றியவர். தமிழில் இவர் இலங்கையில் வெளிவந்த

நெஞ்சுக்கு நீதி, தெய்வம் தந்த வீடு ஆகிய திரைப்படங்களுக்கு திரைக்கதைகளை எழுதியிருக்கிறார்.



இவரது மனைவி ஜெக்கியா ஜுனைதீன் சிந்தாமணிப் பத்திரிகையில் எழுதிய தொடர் கதையை சர்மிளாவின் இதயராகம் என்ற பெயரில் படமாக்கி, இலங்கை தமிழ் திரைப்படத்துறை வளர்ச்சிக்கு உரமூட்டிய ஒருவர்.

பல நூல்களை எழுதியுள்ள ஏ. ஏ. ஜுனைதீன் இலங்கைத் தமிழ்த் திரைப்பட வரலாற்றையும் பதிவாக்கியுள்ளார். சிந்தாமணி காலத்தில், இவருடைய படைப்பும், இலக்கிய ஈடுபாடும், அச்சு ஊடகத்துறையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியிருந்தது.

அச்சு ஊடகத் துறையில் இருந்து திரைப்படத் துறைக்கு கால் பதித்த இவர், சிங்கள திரைப்படங்களிலும், தன்னை ஈடுபடுத்தினார். சிங்கள திரை உலகில் முன்னணி நடிகர்களை வைத்து, இவர் இயக்கிய படங்கள் ஏராளம். தமிழில் திரைப்படம் தயாரிப்பதில் பேரார்வம் கொண்டு உழைத்தவர் ஜுனைதீன். இலங்கையில் , சர்மிளாவின் இதய ராகங்கள் என்ற திரைப்படத்தை வர்ண திரைப்படமாக தயாரித்து பெருமை ஏற்படுத்தியவர். படைப்பிலக்கியத்திலும், திரைப்படத் துறையிலும் முழுமையாக ஈடுபாடு கொண்டு உழைத்த ஜுனைதீன், வருவாயையும் சொத்துக்களையும் அர்ப்பணம் செய்து, சினிமா துறையில், தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர் என்பது பலருக்குத் தெரியாத விடயங்கள்.

பல கலைஞர்களை திரையுலகுக்கு அறிமுகப்ப டுத்திய பெருந்தகை இவர்.

இவர் தனது வானொலி நாடகங்களைத் தொகுத்து "உமர் முக்தார்" எனும் நூலை 2019 ஆம் ஆண்டு வெளியிட்டார். இதுவே இவர் வெளியிட்ட இறுதி நூலாகும்.

சிறந்த ஆளுமையாக மட்டுமன்றி சிறந்த பண்பான மனிதராகவும் வாழ்ந்தவர். எவ்வித தலைக்கனமுமின்றி அனைவருடனும் மிக அன்பாகப் பழகியவர். அவரது மறைவு கலையுலகுக்கு பேரிழப்பாகும்.

அர்ப்பணிப்போடு உழைத்த முழுமையான ஒரு கலைஞனை– படைப்பாளியை நாம் இழந்திருக்கிறோம் என்பது கவலை அளிக்கிறது.

சிறந்த ஆளுமையாக மட்டுமன்றி நற்பண்பான மனிதராகவும் வாழ்ந்த, இவரின் பிரிவால் துன்புற்று இருக்கும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கேற்கிறோம்.

அவரது மறு உலக பேற்றுக்காக பிரார்த்தனை செய்வோம்.

**- என். நஜ்முல் ஹுசைன்**



# மக்களுக்கு சேவையாற்றாத அரச உத்தியோகஸ்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க

(எஸ்.ஆர்.லெம்பேட்)



மக்களுக்குச் சரியான முறையில் சேவை வழங்காத அரச உத்தியோகஸ்தர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு நாம் பின் நிற்கப் போவதில்லை.

எனவே அரச உத்தியோகஸ்தர்கள் மக்களுடன் அன்பாக நடந்து மக்களுக்கு உரிய நேரத்தில் சிறப்பான முறையில் சேவையை வழங்க வேண்டும் என ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டை கட்டி எழுப்புவதற்காக மக்கள் எங்களுக்கு மிகப் பாரிய ஆணையை வழங்கி இருக்கிறார்கள்.

அதைச் சரியான முறையில் முன்னெடுத்து. மக்களின் பிரச்சினைகளை. விரைவில் தீர்க்க நாம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மன்னாரில் இடம்பெற்ற நில மோசடி இட மோசடி தொடர்பில் எல்லாவற்றையும் நாம் அறிந்திருக்கிறோம்.

சம்பந்தப்பட்டவர்கள் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரச்சினைகள் என்று பார்க்கும் இடத்தில், கடந்த 15 வருடங்களுக்கு மேற்பட்ட பிரச்சினைகளை ஒரே நாளில் தீர்த்து விட முடியாது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு இதனை எமது அரசாங்கம் தீர்த்து வைக்கும்.

அதை விட நாட்டின் பிரச்சினைகளைச் சுலபமாகத் தீர்த்து வைப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பும் எமக்குத் தேவை என அவர் தெரிவித்தார்.

# வவுனியாவில் குமார் பொன்னம்பலத்தின் நினைவேந்தல்

(கி.வசந்தன்)




மாமனிதர் குமார் பொன்னம் பலத்தின் 25 ஆவது நினைவுதினம் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் நேற்று காலை அனுஷ்டிக்கப்பட்டது.

அவர்கள் போராட்டம் மேற்கொள்ளும் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாகவுள்ள கொட்டகையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது. இதன்போது அன்னாரது படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# வடக்கு ஆளுநர் - இந்திய துணைத்தூதுவர் சந்திப்பு



வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், இந்தியத் துணைத்தூதுவர் சிறி சாய் முரளி ஆகியோருக் கிடையிலான சிநேக பூர்வமான சந்திப்பு நேற்று முன்தினம் காலை (04) ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் இந்தியத் துணை தூதரக முதன்மை நிர்வாக அதிகாரி ராம் மகேஷிம் பங்கேற்றிருந்தார். ஆளுநர் மற்றும் துணைத்தூதுவர் இருவரும் பரஸ்பரம் புத்தாண்டு வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். இந்திய அரசாங்கத்தால் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட மற்றும் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களுக்கு வடக்கு மக்கள் சார்பில் ஆளுநர் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

புதிய ஆண்டில் இந்திய அரசாங்கத்திடமிருந்து எவ்வாறான உதவிகள், தேவை என்பது தொடர்பில் துணைத்தூதுவர் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார்.



யாழ்ப்பாணம் – தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தானத்தில் கஜமுகசங்ஹா உற்சவம் நேற்று முன்தினம் (04) நடைபெற்றது.நிகழ்வில் விசேட ஹோமப் பூசைகள் நடைபெற்றதுடன் மாலை கஜமுகசங்ஹா நடைபெற்றது.

# ஊர்காவற்துறை படகு திருத்தும் நிலையத்தை இயங்க வைக்கத் திட்டம்

## தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆராய்வு

(பு.கஜிந்தன்)



ஊர்காவற்துறை படகு திருத்தும் நிலையத்தை இயங்க வைப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதாகத் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். குறித்த பகுதிக்கு விஜயம் செய்த கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் ஊர்காவற்துறை இறங்கு துறையைப் பார்வையிட்டனர். அத்துடன் ஊர்காவற்துறையில் அமைந்துள்ள படகு திருத்தும் நிலையத்தை பார்வையிட்டு குறைபாடுகள் தொடர்பில் ஆராய்ந்தனர். படகு திருத்தும் நிலையமானது கடந்த அரசாங்கத்தினால் 2021ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட நிலையில் செயலிழந்து காணப்படுகிறது. அதில் இதுவரை ஒரு படகு மட்டுமே ஏற்றப்பட்டுக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பேசாலை புனித வெற்றி அன்னையின் ஆசிர் வழங்கும் பெருவிழா

(வாஸ் கூஞ்ஞ)



மன்னார் மறைமாவட்டத்தில் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் ஆசிர் வழங்கும் பெருவிழா நேற்று நடைபெற்றது.

வருடத்தில் ஒருமுறை சிம்மாசனத்திலிருந்து இறக்கப்பட்டு மக்களுக்கும் இக்கிராமத்துக்கும் ஆசீர்வதிக்கும் ஒருநாளாக வருடப் பிறப்புக்கு அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமையை பேசாலை மக்களால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவது முன்னோர் காலத்திலிருந்து வரும் வரும் ஒரு பெரு விழாவாகும்.

அகில உலக திரு அவையானது இந்நாளை மூவியரசர் திவ்விய பாலனைத் தரிசித்த அதாவது திருக்காட்சி விழாவாகக் கொண்டாடுகின்றது.

அந்த வகையில் பேசாலை கத்தோலிக்க மக்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை (05) தங்கள் பகுதியில் ஏனைய திருவிழாக்களைவிட இவ்விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

காலை பெருவிழா திருப்பலி முடிவுற்றதும் காலை 10 மணியளவில் சிம்மாசனத்தில் வெற்றியிருக்கும் புதுமைமிக்க புனித வெற்றி அன்னை செப வழிபாட்டுடன் சிம்மாசனத்திலிருந்து இறக்கப்பட்டு அன்னையின் கரங்களில் இருக்கும் குழந்தை இயேசுவைப் பெற்று குழந்தை பாக்கியம் அற்ற குடும்பத்தினர் அருட்பணியாளரிடமிருந்து தங்கள் கரங்களில் அந்த குழந்தை இயேசுவைப் பெற்று முத்தம் செய்து ஆசீர் பெற்றுச் செல்லும் திருச்சடங்கும் நடைபெற்றது.

இந்நிகழ்வை பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் பங்குத் தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

# மன்னாரில் 200 போதை மாத்திரைகளுடன் இளைஞன் கைது

(எஸ்.ஆர். லெம்பேட்)



இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், முருங்கன் பொலிஸ ாரினால் ஒரு தொகுதி போதை மாத்திரைகளுடன் சிலாபத்துறை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞன் ஒருவன் சனிக்கிழமை(4) முருங்கன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் இருந்து 200 போதை மாத்திரைகள் அடங்கிய பொதி மீட்கப்பட்டுள்ளது. குறித்த நபர் போதை மாத்திரைகளுடன் முருங்கன் பஜார் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

# வவுனியாவில் போதை மாத்திரைகளுடன் இரு சந்தேக நபர்கள் கைது

(கி.வசந்தன்)

யாழிலிருந்து ஹம்பாந்தோட்டை நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸில் போதை மாத்திரைகளை கொண்டு சென்ற இருவர் சந்தேகத்தின் பேரில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து யாழிலிருந்து ஹம்பாந்தோட்டை நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸை வவுனியா புதிய பஸ் நிலையத்தில் வழிமறித்த பொலிசார் சோதனையை முன்னெடுத்தனர்.

அச்சந்தர்ப்பத்தில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் பெருமளவான போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன.

அதனை உடைமையில் வைத்திருந்த தென் பகுதியைச் சேர்ந்த இரண்டு நபர்கள் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டதுடன் வவுனியா பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிசார் அவர்களை நீதிமன்றில் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.



யாழ்ப்பாணம் – மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தானத்தில் கஜமுக சூரசம்ஹார உற்சவம் நேற்று முன்தினம் (04) மாலை வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் பாரம்பரிய மானாட்டம், குதிரையாட்டம், மயிலாட்டம், சிலம்பம், பொய்க்கால் நடனம் மற்றும் கரகம் என்பன நடைபெற்றன. (படங்கள் பு.கஜிந்தன்)



**இந்த வைரஸுக்கு தற்போதுவரை முறையான சிகிச்சையோ, தடுப்பு மருந்தோ இல்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்நிலையில், ஹெச்எம்பிவி வைர ஸானது கொரோனாவை போல பெருந்தொற்றை ஏற்படுத்துமா..?**

## சீனாவில் அதிகரிக்கும் புதிய வைரஸ்






தாமோதரம் சுதாகரன்




# மீண்டும் முக கவசம்.?



சீனாவில் பரவும் (**Human Metapneumovirus**) எனப்படும் புதிய வகை வைரஸ் ஒன்றே தற்போது உலக நாடுகளின் தலைப்புச் செய்தியாக மாறியுள்ளதால் பொது மக்களிடையே இது ஒருவகையான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. கொரோனா 2.0 என செல்லமாக அழைக்கப்படும் இந்த வைரஸ் தொடர்பில் அறிந்த உடனேயே உலக சுகாதார நிறுவனம் முதல் உலக நாடுகள் அனைத்தும் பரபரப்பாகி மேற்படி தொற்று தொடர்பான தகவல்களை ஆராயத் தொடங்கியுள்ளன.

இந்தத் தேடலும், அதன் கூடவே ஒட்டிக்கொண்ட பதற்றமும் இயல்பானதே என்று சொல்லும் அளவுக்கு கடந்த 2019 டிசம்பரில் சீனாவின் வூஹான் நகரில் பதிவான கரோனா பாதிப்பு உலகம் முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அத்துடன் கோடிக் கணக்கில் உயிரிழப்புக்களையும் சர்வதேச அளவில் பொருளாதார ரீதியாக பெரும் பின்னடைவையும் ஏற்படுத்தியது. பல்வேறு பாதிப்புகளால் உலகம் பல மாதங்கள் ஸ்தம்பித்தது. உருமாறி உருமாறி கொரோனா பெருந்தொற்று ஏற்படுத்திய பாதிப்புகள் உண்மையில் எல்லோரும் மறக்க நினைக்கும் ஒரு கொடுங்கனவாகும்.

அதனாலேயே சீனாவில் தற்போது பரவ ஆரம்பித்துள்ள ஹியூமன் மெடாநிமோ (**Human Metapneumovirus**) என்ற புதியவகை வைரஸ் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்நிலையில் உலக நாடுகள் பலவும் மேற்படி தோற்று தொடர்பில் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அரம்பித்திருப்பதாக தெரிகின்றது.

### எச்.எம்.பி.வி. வைரஸ் என்றால் என்ன?

இதை மிக எளிமையாக சொல்ல வேண்டுமானால் சாதாரண சளித் தொல்லையை ஏற்படுத்தும் 'ஃப்ளூ' வைரஸ் போன்றது எனலாம். அதாவது சுவாசப் பாதையில் பாதிப்பை ஏற்படுத்தும் மற்றுமொரு வைரஸ் ஆகும். அந்த வகையில் தொற்று ஏற்பட்ட நபருடன் கை குலுக்கிவிட்டு கையை கண்கள், மூக்கு, வாயில் வைத்தல், அவர் தும்மும் போதோ இருமும் போதோ அருகில் இருத்தல் போன்றவற்றாலும் தொற்று பரவும். கொரோனா பரவலுக்கும் இதே காரணம் தான் சொல்லப்பட்டது என நீங்கள் யோசிக்கலாம். எல்லா ஃபோமைட் போர்ன் (**fomite borne**) அதாவது வைரஸ் பாதித்தவர் தொட்டதால் உயிரற்ற பொருட்களின் மீது வைரஸ் ஒட்டி அதன்மூலம் மனிதர்களுக்குள் வைரஸ் பரவுதல் ஒரே பாணியில் தான் நடைபெறும் என்கின்றனர் மருத்துவ நிபுணர்கள்.

மேலும், 'ஃப்ளூ' வைரஸ்கள் மிகவும் புத்திசாலிகள், அதாவது அதன் மரபணு மிக வேகமாக தன்னை உருமாற்றிக் கொள்ளக் கூடியது. அதனால் உருமாறும் போது அதற்குப் பெயரும், கூடவே அதனைச் சுற்றிய பரபரப்பும் அதிகரிக்கிறது என்கின்றனர் மருத்துவர்கள்.

கொரோனாவை போன்றே இந்த வைரஸால் காய்ச்சல், இருமல், சளி, தொண்டை வலி உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன. மூச்சுத் திணறல் ஏற்படுகிறதா என்ற தகவல் ஏதும் இதுவரை பதிவாகவில்லை. ஆனால் இந்த புதிய வைரஸால் சிறுவர்களே அதிக அளவில் பாதிக்கப்படுவதாக கூறப்படுகின்றது.

### WHO கேள்வியும், சீன மறுப்பும்

சீன மருத்துவமனைகளில் காய்ச்சல், தொண்டை வலி பாதிப்புகளுக்காக மக்கள் கூட்டங்கூட்டமாக காத்திருக்கும் காணொளிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. சீனாவின் பல்வேறு பகுதிகளில் அவசரகால நிலை அமுல்படுத்தப்பட்டு இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகின.

இதற்கிடையில், புதிய வைரஸ் குறித்த விபரங்களை வழங்குமாறு சீன அரசாங்கத்திடம் உலக சுகாதார அமைப்பு கேட்டுக் கொண்டுள்ள அதேவேளை கொரோனா போன்ற புதிய வைரஸ் பரவுவதாக எழுந்த சந்தேகங்களை உலக சுகாதார அமைப்பு முற்றிலுமாக மறுத்துள்ளது.

இந்நிலையில், சீன அரசாங்கத்தின் நோய்க் கட்டுப்பாட்டு பிரிவு இது தொடர்பாக அளித்த விளக்கத்தில், "நிமோனியா போன்ற பாதிப்பு ஏற்படுவதாக எழுந்துள்ள புகார்களை கண்காணித்து வருகிறோம். சீனாவில் தற்போது குளிர்காலம் ஆரம்பித்துள்ளதால் சுவாசப் பாதை தொற்றோடு பலரும் மருத்துவமனைகளை நாடுகின்றனர். டிசம்பர் 16 முதல் 22 வரை இத்தகைய தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது." ஆனால் எச்எம்பி வைரஸ் குறித்து அதில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆனாலும் எழுந்துள்ள புதிய சந்தேகங்களின் அடிப்படையில் புதிய வைரஸ் தொடர்பில் உலக சுகாதார அமைப்பு தகவல்களைக் கோரியுள்ள நிலையில், சீனா அது தொடர்பில் விளக்கமளித்துள்ளது. அந்தவகையில் சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் கூறுகையில், "சீனாவில் குளிர் காலத்தில் எப்போதும் சுவாசப் பாதை தொற்று நோய்கள் அதிகரிப்பது இயல்பே. சீன அரசு குடிமக்கள், சுற்றுலா பயணிகளின் உடல் நலனின் எப்போதுமே அக்கறை கொண்டுள்ளது. சீனாவில் தொற்று நோய் பரவல் ஏதும் இல்லை. சீனாவுக்கு சுற்றுலா பயணிகள் தாராளமாக வரலாம். ஏனெனில் இந்த வைரஸ் வீரியமற்றது. பரவலும் மிகமிகக் குறைவு என விளக்கமளித்துள்தால் அவரின் இந்த விளக்கம் 'சீனாவில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல்' என்ற செய்திக்கு முற்றுப்புள்ளியாக அமைந்துள்ளது.

ஆனாலும், கொரோனா பரவல் ஆரம்பித்த 2019ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியிலும் சீன அரசாங்கம் இவ்வாறான ஒரு விளக்கத்தையே கொரேனா தொடர்பிலும் வழங்கியிருந்தது. இருப்பினும் உலக சுகாதார நிறுவனம் குறித்த வைரஸ் தொடர்பில் ஆராய்ந்து கொரானா தொடர்பாகவரும் அதன் தாக்கம் எவ்வாறு இருக்கும் என்ற நிலைமை தொடர்பிலும் விழிப்புணர்வு அறிக்கை ஒன்றை வெளியிட்ட பின்னரே உலக நாடுகள் பல அதுதொடர்பில் விழிப்படைந்தன. ஆனாலும் அதற்கு முன்னர் அந்தந்த நாட்டுக்குள் கொரோனா வைரஸ் காலடி பதித்திருந்ததே உண்மை நிலையாகும். அவ்வாறான ஒரு சந்தேகத்தின் அடிப்படையிலே தற்போதும் உலக சுகாதார அமைப்பு சீனாவிடம் குறித்த வைரஸ் தொடர்பில் முழுமையான அறிக்கை ஒன்றை கோரியிருக்கலாம் என்பதும் சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

வைரஸ் தொற்றுகள் குறித்த செய்திகளை நிதானமாக அணுகினால் தேவையற்ற அச்சத்தையும், பொதுமக்கள் மத்தியில் பீதியையும் ஏற்படுத்துவதைத் தவிர்க்கலாம். மேலும், கைகளைக் கழுவுதல், அதிக நெருக்கடியான, காற்று மாசு நிறைந்த பகுதிகளுக்குச் செல்லும் போது முகக்கவசம் அணிந்து கொள்ளுதல், தனிப்பட்ட சுகாதார த்தைப் பேணுதல் போன்ற பழக்கங்களை வழக்கமாக்கிக் கொண்டால் இதுபோன்ற வைரஸ் தொற்று காலத்தில் மட்டுமல்லாது எப்போதுமே தற்காப்பை நல்கும் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை மணி ஒன்றையும் விடுத்துள்ளது.

### எச்.எம்.பி.வி ஏற்றால் என்ன?:

எச்.எம்.பி.வி என்பது சுவாச ஒத்திசைவு வைரஸ் ( **respiratory syncytial virus**) (**RSV**) மீசிலெஸ், மம்ஸ் போன் வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்தது. எச்.எம்.பி.வி என்பது ஒருவகை சுவாச தொற்றுநோய் வைரஸ் ஆகும். இது மேல் மற்றும் கீழ் சுவாச நோய்த்தொற்றுகளை ஏற்படுத்துகின்றது. அது மாத்திரமன்றி இது அனைத்து வயதினருக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. இந்த வைரஸ் முதன்முதலாக 2001ஆம் ஆண்டு நோர்வே நாட்டில் கண்டறியப்பட்டதாக கூறப்படுகின்ற அதேவேளை பறவைகளில் இருந்தே மனிதர்களுக்கு பரவுவதாகவும் சொல்லப்படுகின்றது.

இந்த வைரஸுக்கு தற்போதுவரை முறையான சிகிச்சையோ, தடுப்பு மருந்தோ இல்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்நிலையில், ஹெச்எம்பிவி வைரஸானது கொரோனாவை போல பெருந்தொற்றை ஏற்படுத்துமோ எனப் பலரும் ஒருவகை அச்சத்தில் உறைந்துள்ளதே உண்மையான நிலையாகும்.

### ஹெச்எம்பிவி வைரசுக்கும் கொரோனாவுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

நாம் மேலே குறிப்பிட்டதை போன்று கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு சீனாவில் புத்தாண்டு காலகட்டத்தில் எப்படி கொரோனா பரவியதோ.. அதேபோல இப்போது அங்கே ஹெச்எம்பிவி வைரஸ் பரவ ஆரம்பித்துள்ளது.

இந்த ஹெச்எம்பிவி வைரஸின் பரவல் காரணமாக சீனாவில் உள்ள மருத்துவமனைகள் நிரம்பி வழிவதாக அனைத்து சமூக ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகியுள்ளன. அவ்வளவு ஏன் ஹெஎம்பிவி வைரஸ் பாதிப்பைச் சமாளிக்க சீனா அவசரநிலையை அறிவித்துள்ளதாகக் கூட அந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அந்த செய்தியை சீனா இதுவரை அதிகாரப்பூர்வமாக உறுதி செய்யவில்லை.

### ஒற்றுமைகள்:

குழந்தைகள், முதியவர்கள் மற்றும் இணை நோய் இருப்போருக்கு இது நிமோனியா, மூச்சுக்குழாய் அழற்சி மற்றும் ஆஸ்துமா உள்ளிட்ட தீவிர பாதிப்பை ஏற்படுத்தும். இந்த வைரஸ் நமது உடலில் புகுந்து 3 நாட்களிலேயே அதன் அறிகுறிகள் தென்படத் தொடங்கும். இந்த **HMPV** வைரஸும் கொரோனைவை ஏற்படுத்திய **SARS-CoV-2** வைரஸும் வெவ்வேறு வைரஸ் குடும்பங்களைச் சேர்ந்தவை என்றாலும், இரண்டிற்கும் இடையே குறிப்பிடத்தக்க ஒற்றுமைகள் உள்ளதாக கூறப்படுகின்றது.

அதாவது, இரண்டுமே சுவாச நோயாகும். இந்த இரண்டு வைரஸ்களும் முதன்மையாகச் சுவாச மண்டலத்தைக் குறிவைத்து, லேசானது முதல் கடுமையான நோய்த் தொற்றை ஏற்படுத்துகிறது. காய்ச்சல், இருமல், தொண்டை வலி, மூச்சுத்திணறல் ஆகியவையே இரண்டுக்கும் பொதுவான அறிகுறிகளாகும். கொரோனாவை போலவே இதுவும் முதியவர்கள் முதல் இணைநோய்களை கொண்டிருப்போர் வரை அதிக தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

### வேறுபாடு:

அதேநேரம் இது பரவும் முறையில் தான் முக்கியமான வேறுபாடு இருக்கிறது. அதாவது கொரோனாவை பொறுத்தவரை அது காற்றின் மூலமாகவே அதிகம் பிறவும் தன்மைகொண்டது. அதாவது கொரோனாவால் பாதிக்கப்பட்ட நபரின் மூச்சில் இருந்து வெளியேறும் காற்றின் மூலமாகவே இந்த வைரஸ் பரவும். அதேநேரம் ஹெச்எம்பிவி வைரஸ் தற்போதைய சூழலில் காற்றினால் பரவுவது போலத் தெரியவில்லை. இது பாதிக்கப்பட்ட நபர்களில் இருந்து வெளிவரும் நீர்த்துளி மூலமாகவே பரவுவதாகச் கூறப்படுகின்றது.

வைரஸ் பரவலைத் தடுப்பது என்பது இந்த இரு வைரஸ் மட்டுமின்றி எல்லாவற்றுக்கும் பொதுவான ஒன்று தான். அதாவது முகமூடி அணிவது, அடிக்கடி கைகளைக் கழுவி சுகாதாரத்தைக் கடைப்பிடிப்பது ஆகியவை மூலம் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தலாம். மேலும், சமூக இடைவெளியைக் கடைப்பிடிப்பதும் முக்கியத்தனதாகப் பார்க்கப்படுகிறது. தடுப்பூசியைப் பொறுத்தவரை கொரோனாவுக்கு இப்போது நம்மிடம் பல தடுப்பூசிகள் உள்ளன. ஆனால், ஹெச்எம்பிவி வைரசுக்குத் தடுப்பூசிகள் எதுவும் இல்லை. அதன் அறிகுறிகளை மட்டுமே பார்த்து சிகிச்சையளிக்க வேண்டிய சூழலே காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

### இலங்கை நிலைவரம்

தற்போது வரை இலங்கையில் இந்த நோய்த்தொற்றுடன் எவரும் அடையாளம் காணப்படவில்லை. அத்துடன் சீனாவிலேயே இந்த நோய்த்தொடர்பில் கடுமையான கட்டுப்பாடுகள் எதுவும் விதிக்கப்படவில்லை. இதனால் தற்போதைய சூழலில் நாட்டை முடக்குதல் அல்லது ஊரடங்கு நிலைமை குறித்தெல்லாம் யோசிக்கக்கூடத் தேவையில்லை என்றே ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

### சமூக வலைத்தளங்கள் கூறுவதை நம்பலாமா?

சமூக ஊடகங்களில் வெளிவந்துள் காணொளிகளில் மனித மெட்டாப்நியூமோவைரஸ் (**HMPV**) தீவிரமாக பரவ ஆரம்பித்துள்ளதால் சீனாவில் உள்ள மருத்துவமனைகள் நோயாளர்களால் நிரம்பியிருப்பதை காட்டுகின்றது.

அதேவேளை கோவிட் -19 எமது வாழ்க்கையை ஸ்தம்பிக்கவைத்த ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர், மேற்படி வைரஸ் பெருந்தொற்று தொடர்பில் வெளியாகும் காணொளியானது பெரும் பீதியை உருவாக்கியுள்ளது. எவ்வாறாயினும், குறித்த காணொளிகளில் எந்தவொரு நம்பகமான தகவலும் இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

அத்துடன் அந்த காணொளிகளில் நோயாளிகள் நிரம்பிய மருத்துவமனையின் காத்திருப்பு அறையில் பலர் கடுமையாக இருமிக்கொண்டும், வலியால் அவதிப்பட்டு முனங்கும் காட்சிகளும் பதிவாகியுள்ள அதேவேளை மற்றொரு காணொளி யில் மருத்துவமனை நடைபாதையில் பல வயதானவர்களைக் காட்டுகிறது. 'இன்ஃப்ளூவன்ஸா ஏ' மற்றும் 'மனித மெட்டாப்நியூமோவைரஸ்'மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நாம் எதிர்கொண்ட **COVID**-19 நோய்த்தொற்றை ஒத்திருப்பதால் சீனாவில் உள்ள மருத்துவமனைகள் ," தற்போது நிரம்பிவழிவதாக அதில் காட்டப்படுவதுடன் இந்த காணொளி சீனாவில் படமாக்கப்பட்டது என்ற தலைப்பைத் தாங்கி **X** தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

**X** தளத்தில் மாத்திரம் குறித்த காணொளியை 12 மில்லியன் பார்வையிட்டுள்ள பார்வையிட்டுள்ள அதேவேளை ஏனைய சமூக வலைத்தளங்களில் குறித்த காணொளியை தற்போது வைரலாகியுள்ளது.

எது எப்படியோ, சீன சுகாதார அதிகாரிகளோ அல்லது உலக சுகாதார நிறுவனமோ (**WHO**) இவ்வாறானதொரு ஒரு புதிய தொற்றுநோய் இருப்பதை இதுவரை உறுதிப்படுத்தாத அதேவேளை பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு எந்த ஒரு உத்தியோகபூரவமாக அறிக்கையையும் வெளியிடவில்லை. ஊகங்களுக்கு மாறாக, எந்த ஒரு நாட்டிலும் அவசரகால நிலை கூட பிறப்பிக்க ப்படவில்லை என்பதே நாமறிந்த உண்மையாகும்.

**நோய் அறிகுறிகள் :**

எச்.எம்.பி.வி இன் அறிகுறிகள் காய்ச்சல் மற்றும் பிற சுவாச நோய்த்தொற்றுகளின் அறிகுறிகளைப் போலவே இருக்கும். இருமல், காய்ச்சல், நாசி ஏரிசல் மற்றும் மூச்சுத் திணறல் ஆகியவை பொதுவான அறிகுறிகளாகும். ஆனாலும் மேற்படி வைரஸ் தாக்கம் அதிகரிக்கும் பொது (நாள்பட்ட) மூச்சுக்குழாய் அழற்சி அல்லது நிமோனியாவுக்கு வழிவகுக்கலாம்.

**நோய் பரவும் முறை:**

* ஏனைய வைரஸ்களைப் போலவே மனித மெட்டாப் நியூமோ வைரஸும் பரவுகிறது.
* இருமல் மற்றும் தும்மல் மூலமே இது பரவுவதற்கான அதிக வாய்ப்பு ஏற்படுகின்றது.
* கைக்குலுக்குதல் மற்றும் தொடுதல் மூலமும் பரவுகிறது.
* அசுத்தமான பகுதிகளில் கையை வைத்துவிட்டு பின்னர் வாய், மூக்கு அல்லது கண்களைத் தொடுவதன் மூலம் இது பரவுகிறது.
* இந்த வைரஸால் குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உடையவர்கள் எளிதாக பாதிக்கப்படுகின்றனர்.

**நோய் தடுப்பு முறை:**

* குறைந்தது 20 விநாடிகள் சவற்காரமிட்டு கையை நான்றாக கையை கழுவ வேண்டும்.
* கைக்கழுவாமல் முகத்தை தொடக்கூடாது.
* நோய் அறிகுறி உள்ளவர்களிடம் இருந்து விலகி இருக்க வேண்டும்.
* நாம் அடிக்கடி தொடும் கதவு கைப்பிடிகள் போன்றவற்றை சுத்தமாக வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

# திரிபோஷ நிறுவனத்தை அரச நிறுவனமாக தொடர தீர்மானம்

கந்தானையிலுள்ள திரிபோஷ நிறுவனத்தை அபிவிருத்தி செய்து அதனை அரச நிறுவனமாக தொடர்ந்து நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கடந்த சனிக்கிழமை தெரிவித்தார்.

கந்தானையில் அமைந்துள்ள திரிபோஷ நிறுவனத்தின் தற்போதைய நிலைமை மற்றும் அதன் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுடன் கடந்த சனிக்கிழமை (04, கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

தேசிய ரீதியில் பெறுமதியான இந்த திரிபோஷ உற்பத்தி நிலையத்தை அபிவிருத்தி செய்து, அதன் பயனை மக்களுக்கு வழங்குவதற்கு முன்னைய அரசாங்கங்கள் முறையான வேலைத்திட்டங்களை அமுல்படுத்தாத காரணத்தினால், மக்கள் முழுப்பலன்களையும் அடையவில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இலக்கை மனதில் கொண்டு செயற்படுவதாக அமைச்சர் தெரிவித்தார். தொடர்ந்தும் இங்கு உரையாற்றிய அமைச்சர்,



இந்த திரிபோஷ உற்பத்தி நிறுவனத்தை கலைக்க கடந்த அரசாங்கம் தீர்மானித்திருந்ததாக குறிப்பிட்டார். எதிர்காலத்தில் திரிபோஷ உற்பத்தி நிறுவனத்தின் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் போது , திரிபோஷ நிறுவனத்திற்குத் தேவையான சோளம் மற்றும் சோயாவை நிறுவனத்திற்கு வழங்கும் விவசாய உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களை ஒருங்கி ணைத்து தொடர்ச்சியான அமைப்பை ஏற்படுத்த வேண்டும். நிறுவனத்தின் விநியோக வலையமைப்பு சீர்குலைந்துள்ளதாக வும், திரிபோஷா நிறுவனத்தை கலைப்பதற்கு பதிலாக, சுகாதார அமைச்சு தலையிட்டு, அதன் உற்பத்திகளை விநியோகிப்பதற்கான முறையான அமைப்பை தயார் செய்ய வேண்டு மெனவும் இவ்விடத்தில் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

முறையான அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டு மக்களின் முன்னேற்றம் மற்றும் போஷாக்குக்கு தேவைக்கான நிறுவனம் அதனை ஒரு மேம்பட்ட நிறுவனமாக தொடர்ந்து பேணுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டெபெனி பெர்னாண்டோ, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன, இலங்கை திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன, திரீபோஷா நிறுவனத்தின் பணிப்பாளர் சபை, அமைச்சின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குழு மற்றும் நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சுற்றாடல் அமைச்சர் சந்திப்பு



பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஆன்ட்ரூ பேட்ரி சுற்றாடல் அமைச்சர் டொக்டர் தம்மிக பட்டபெதி அண்மையில் சுற்றாடல் அமைச்சில் சந்தித்தார். நிகழ்ச்சித்திட்ட அதிகாரி தாரிணி சமரசிங்க, அமைச்சின் செயலாளர் மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஏனைய அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் யானை – மனித மோதல்கள், சுற்றாடல் மாசுபாடு மற்றும் பருவநிலை மாற்றம் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஐக்கிய இராச்சியத்தில் சுற்றுச்சூழல் அமைப்பின் பயன்பாடு குறித்து கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றீடாக மின்சார கார்களின் பயன்பாட்டையும் உற்பத்தியையும் அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

# முன்பள்ளிக்கு புதிய மாணவர் அனுமதி

(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் மூன்றாம் குறுக்குத் தெரு மௌலாமகாம் மர்க்கஸ் பள்ளிவாசல் வளாகத்தில் இயங்கி வருகின்ற புத்தளம் நகரின் தமிழ் மொழி மூலமான முதலாவது முன்பள்ளியான ஜஎப்எம் முன்பள்ளிக்கு 2025 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

2025 ஜனவரி மாதம் 3 வயது அல்லது 4 வயது பூர்த்தியான பிள்ளைகள் இந்த முன்பள்ளிக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான விண்ணப்பங்களை வார நாட்களில் காலை 08 மணியிலிருந்து 11 வரைக்கும் பாடசாலை மண்டபத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என அதன் பொறுப்பாசிரியை ரூசி சனூன் தெரிவித்துள்ளார்.

புத்தளம் ஜஎப்எம் முன்பள்ளி பல அரசியல் பிரபலங்களை, உலமாக்களை, புத்தி ஜீவிகளை மற்றும் சமூகவியலாளர்களை உருவாக்கிய பெருமையோடு 2025 ஜனவரியில் தனது 53 வது வயதில் கால் பதிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# தங்க ஆபரணங்களுடன் விமான நிலையத்தில் ஒருவர் கைது

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட தங்க ஆபரணங்களுடன் சந்தேக நபர் ஒருவர் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அபுதாபியில் இருந்து இலங்கைக்கு வந்த பயணி ஒருவர் தொடர்பில் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விமான நிலைய பொலிஸார் சந்தேக நபரை சனிக்கிழமை (04) இரவு கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் கைது செய்யப்பட்ட போது, அவர்களிடமிருந்து 4 தங்க நெக்லஸ்கள், 1 பென்டன், 02 வளையல்கள், 2 தங்க வளையல்கள் மற்றும் ஒரு தங்க மோதிரம் ஆகியவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வெலம்பொட பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பைசல் எம்.பி புத்தளம் சீமாவெளிக்கு கள விஜயம்

(எம்.யூ.எம்.சனூன்)

தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம்.பைசல் புத்தளம் சீமாவெளி கிராமத்தில் கள விஜயமொன்றைமேற்கொ ண்டிருந்தார்.

புத்தளம் நகர சபை வட்டாரம் 01 சீமாவெளி கிராமத்தின் உள்ளக பாதைகளில் இடைஞ்சலாக உள்ள மரக் கொப்புகளை வெட்டும் சிரமதானப் பணியைப் பார்வையிட்டார். வட்டாரம் 01 தலைவர் ஸர்ராஜ் லாபீர் மற்றும் ரின்ஷாத் அஹ்மத் தலைமையில் சிரமதான பணிகள் இடம்பெற்றன.

இச்சிரமதானத்திற்கு தேசிய மக்கள் சக்தியின் வட்டாரம் 01 சீமாவெளி கிராம செயற்குழுவினரும், புத்தளம் நகர செயற்குழுவினரும் கலந்துகொண்டனர்.



வெட்டப்பட்ட மரக் கிளைகளை அகற்றுவதற்கு நகர சபையின் கழிவகற்றும் வண்டியை செயலாளர் பிரீத்திக்கா தந்துதவினார். தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் பிரதேச சபை அமைப்பாளர் அகில சம்பத் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# வருடாந்த கலை நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

(கற்பிட்டி சியாஜ்)

கற்பிட்டி மணல்தோட்டம் பாத்திமா செய்னப் பாலர் பாடசாலையின் 12 ஆவது வருடாந்த கலை நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் பாடசாலையின் வளாகத்தில் பாத்திமா செய்னப் பாலர் பாடசாலை மற்றும் செய்னப் பெண்கள் மத்ரஸ ாவின் தலைவர் எஸ்.எம் றியாஸ் தலைமையில் இடம்பெற்றது

இந்நிகழ்வின் அதிதிகளாக கற்பிட்டி பிரதேச செயலக பாலர் பாடசாலைகளுக்கான பொறுப்பதிகாரி எச்.எம் நிப்ராஸ், வன்னிமுந்தல் கிராம உத்தியோகத்தர் ஜே. இஸட். எப் சஹீனா, கற்பிட்டி பிரதேச செயலக இளைஞர் சேவை உத்தியோகத்தரும் செடோ ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளருமான ஏ.ஆர் முனாஸ், தில்லையூர் பாடசாலையின் அதிபர் எஸ். எம் அருஸ் மற்றும் ரோமன் கத்தோலிக்க



தமிழ் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் எஸ்.டி.எம் சுகைப் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சிறார்களின் கலை ஆற்றல்களையும் ஆளுமைகளையும் வெளிக் கொணரும் நோக்கோடு இடம்பெற்ற மேற்படி கலை நிகழ்விற்கு பெற்றோர்கள் தமது முழுமையான பங்களிப்புக்களை வழங்கியதுடன் பாத்திமா செய்னப் பாலர் பாடசாலையின் ஆசிரியர்களான எம். ஆர்.எப் சிப்கா, எஸ் இஷ்ரத் ஆகியோர் இந்த சிறார்களை சிறப்பாக தயார்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# பலா மரக் கன்றுகள் இலவசமாக வழங்கி வைப்பு

(எம்.ரீ.ஆரிப்)



அநுராதபுரம் மாவட்டத்தில் சுமார் 400 விவசாயிகளுக்கு இலவச பலா மரக் கன்றுகளை வழங்க வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் அடிப்படையில் அநுராதபுரம் மொரகொட மற்றும் ஹேனபொலயகம பிரதேச விவசாயிகளுக்கே இவ்வாறு பலா மரக் கன்டுகள் ஆளுநரினால் வழங்கி வைக்கப்பட்டன.

இதற்கான நிதி உதவியை அமெரிக்காவில் வசித்து வரும் கலாநிதி விஜேசிறி அமரசிங்க மற்றும் மஞ்சுள கொடித்துவக்கு ஆகியோரினால் வழங்கப்பட்டுள்ளது. மஹாஇலுப்பல்லம விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சிறந்த வகை பலா மரக் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

# 11 கிலோ தங்கம் கடத்திய மூவர் கைது

(எம்.எச். எம் சியாஜ்)



கற்பிட்டி, பத்தளங்குண்டு தீவு ஆத்துவாய் பகுதிக்கு அப்பால் படகு ஒன்றில் கடத்தி செல்வதற்கு முனைந்த 11 கிலோ 300 கிராம் தங்கத்துடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை அதிகாலை கடற்பகுதியில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விஷேட ரோந்து நடவடிக்கையின் போதே மேற்படி சட்ட விரோத தங்கம் முறியடிக்கப்பட்டு தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன் போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் வெளி மாவட்டங்களில் இருந்து கற்பிட்டி வன்னிமுந்தல் மற்றும் முஹமதிய்யாபுரம் பகுதிகளில் குடியேரியவர்கள் என்பதுடன் கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி சுமார் 30 கோடி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கற்பிட்டி விஜய கடற்படையின் விஷேட குழுவினால் கைப்பற்றப்பட்ட தங்கம் மற்றும் சந்தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்களுக்காக கட்டுநாயக்க சுங்க திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

# வெண்ணிலா பாலர் பாடசாலை மாணவர்களின் கலைவிழா







உடப்பில் அமைந்துள்ள வெண்ணிலா பாலர் பாடசாலை ஒன்றியம் ஏற்பாடு செய்த கலைவிழா உடப்பு இந்து கலாசார மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை(3) நடைபெற்றது.இதில் உடப்பு,ஆண்டிமுனை, செல்வபுரம் பகுதியிலுள்ள பாலர் பாடசாலைகளின் மாணவர்களின் பேண்ட் வாத்தியம் சகிதம் அதிதிகள் வரவேற்கப்பட்டனர். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. சர்வமதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் நிகழ்ச்சிகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டன.இதில் நிகழ்ச்சியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழும் வழங்கப்பட்டது.நிகழ்வில் ஆசிரியர்கள், அதிபர்கள்,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,கிராம உத்தியோகத்தர்கள்,பெற்றோர்கள்,சங்க உறுப்பினர்கள்,பொது மக்கள் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை கண்டு களித்தனர். (க.மகாதேவன்)

# 25 ஆண்டுகள் மாகாண சபையில் சேவை:

# ஓய்வூதியம் பெறமுடியாமல் அல்லலுறும் பராமரிப்பு ஊழியர்கள்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

1999ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இணைந்த வடகிழக்கு மாகாண சபையில், தற்காலிக அமைய அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப் பட்ட அலுவலக பராமரிப்பு ஊழியர்களுக்கு 2012ஆம் ஆண்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், இதுவரை இவர்களது சேவை உறுதிப்படுத்தப்படாமல் உள்ளதால் பல்வேறு இடர்பாடுகளையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வருவதாக ஊடக சந்திப்பின் போது தெரிவித்தனர்.

அகில இலங்கை பொது ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு சங்கத்தின் கல்முனை தலைமை அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை (04) நடைபெற்றது.

ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது சில ஊழியர்கள் ஓய்வு நிலைக்கு சென்றுள்ள போதிலும் ஓய்வூதியத்தை கூட பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது. இதனால் குடும்ப வாழ்வாதாரத்தை முன் கொண்டு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கின்றோம் என்றும் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமது பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என பாதிக்கப்பட்ட அலுவலக பராமரிப்பு ஊழியர்கள் இங்கு தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தினர்.

இந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அகில இலங்கை பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன், சங்கத்தின் ஆலோசகரும் இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளருமான எம்.ஹுசையின் முபாறக், ஆலோசகர் எம்.எம்.ஏ.வஹாப்தீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர்

இது ஒரு நீண்டகால பிரச்சினை யாகும். ஊழியர்களின் இந்த நீண்ட கால பிரச்சினைகள் தொடர்பில் மாகாண சபை உரிய தீர்வினை வழங்க வேண்டும். நாம் கடந்த ஒரு வருடகாலமாக இதனை தீர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். இணைந்த வடகிழக்கில் அப்போது சேவையிலிருந்த இவர்கள் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் என்பதால் கிழக்கு மாகாணத்தின் கீழ் இணைக்கப்பட்டார்கள்.

இதன் பின்னர் 2006 ஆம் ஆண்டு இவர்களின் சேவையை உறுதிப்படுத்தி நிரந்தர நியமனத்தை வழங்குமாறு மத்திய அரசாங்கத்தினால் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டிருந்தது. எனினும் இதை கிழக்கு மாகாண சபை நடைமுறைப்படுத்த தவறியது. இந்நிலையில் 2012 ஆண்டு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசனம், கிராமிய மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு இவர்களுக்கான நியமனத்தை வழங்கியது. அப்போதைய அமைச்சின் செயலாளரினால் இவர்களுக் குரிய கடிதங்கள் வழங்கப்பட்டு தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இவர்களுக்கான சேவையை உறுதிப்படுத்தும் கடிதம் இதுவரை வழங்கப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருவதால், ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ளுதல், வேறு உயர் பரீட்சைகளுக்கு தோற்றுதல், அடுத்த கட்ட சேவை உயர்வுக்கு செல்லுதல், வயது மூப்பு, சம்பள உயர்வு போன்ற பல்வேறு இடர்பாடுகளை ஊழியர்கள் சந்தித்து வருகின்றனர். நாம் கிழக்கு மாகாணத்தின் தற்போதைய ஆளுநர் மீது நம்பிக்கை வைத்துள்ளோம். அதிகாரிகளை நம்பத் தயாரில்லை. ஆனாலும் கால இழுத்தடிப்புகள் தொடர்ந்தும் இடம்பெற்றால் தாம் வீதிக்கு இறங்கி ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் கவன ஈர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டி ஏற்படும் என்று தெரிவித்தனர்.

அகில இலங்கை பொது ஊழியர் சங்கத்தின் ஆலோசகர் ஹுசையின் முபாறக் உட்பட பாதிக்கப்பட்ட ஊழியர்களும் இங்கு கருத்துக்களை வெளியிட்டனர்.

## மழை ஓய்ந்தும் முதலைகளின் நடமாட்டம் ஓயவில்லை



(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்து வந்த வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை ஓய்ந்திருக்கின்ற போதும் கிராமியக் குளங்கள் முற்றாக நீர் நிரம்பியுள்ளன. இந்நிலையில் அக்குளங்களில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பெரு நிலப்பரப்பிற்குட்பட்ட போரதீவு பற்றுப் பிரதேசத்திற்குட்பட்ட வெல்லாவெளிக் குளத்தில் முதலைகள் அதிகளவு நடமாடுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வெல்லாவெளிக் குளத்தில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் அக்குளத்தைப் பயன் படுத்தும் விவசாயிகளும் மீனவர்களும் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

போரதீவுப் பற்றுப் பிரதேச செயலகத்தின் முன்னால் அமைந்துள்ள வெல்லாவெளி குளத்தில் மாத்திரம் சுமார் 07 இற்கு மேற்பட்ட முதலைகள் காணப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் மட்டக்களப்பு வாவியிலிருந்து இவ்வாறு குளத்திற்கு முதலைகள் வந்திருக்கலாம் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். குறித்த குளம் மக்கள் குடியிருப்பையும் அண்மித்துள்ளதனால் பொதுமக்களும், அப்பகுதியில் இரவு வேளைகளில் பயணம் செய்யும் பிரயாணிகளும், மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## சபரிமலை யாத்திரைக் குழு இந்தியா பயணம்



(ருத்ரா)

மட்டக்களப்பு சித்தாண்டி மாவடிவேம்பு ஸ்ரீ ஜயப்பசுவாமி ஆலய குருசாமி சிவஸ்ரீ விஜயகுமார் தலைமையிலான சபரிமலை யாத்திரைக் குழுவினர் ஜயப்ப சுவாமியை தரிசிக்க சனிக்கிழமை (4) இந்தியா செல்ல புறப்பட்டனர்.

இதற்காக ஆலயத்தில் விசேட பூசைகள் நடைபெற்றதுடன் உறவுகளின் ஆசிர்வாதத்துடன் பாத பூசைகள் நடைபெற்று இருமுடி சுமந்து ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் அம்மனை தரிசித்து அங்கிருந்து புறப்பட்டனர். எதிர்வரும் சில தினங்களில் இந்தியா சென்று அங்கு தரிசனம் செய்து ஜோதி பூஜை கண்டவுடன் மீண்டும் இலங்கை வந்தடைவர். இக் குழுவில் ஆண்கள், பெண்கள் என இருபலாரும் அடங்குவார்கள்.

## வாகரையில் கரையொதுங்கிய உருளை வடிவ தாங்கி

(ருத்ரா)



மட்டக்களப்பு வாகரை காயான்கேணி கடற்கரையில் நேற்று முன்தினம் சனிக்கிழமையன்று (04) இரும்பிலான உருளை வடிவ தாங்கி ஒன்று கரையொதுங்கியுள்ளதாக வாகரை பொலிசார் தெரிவித்தனர்.

கடலில் மிதந்து வந்த குறித்த இரும்பிலான உருளை வடிவ தாங்கி பிரதேச மீனவர்கள் மற்றும் கடற்படையினர் இணைந்து கரைசேர்த்துள்ளனர்.

இது ஆழ்கடலில் தரித்து நிற்கும் கப்பல்களின் உதிரிப்பாகமாகவோ அல்லது அவற்றின் ஏனைய செயற்பாடு களுக்கு பயன்படுத்தும் பொருளாக இருக்கலாம் என பொலிசார் தெரிவிக்கின்றனர். இதனை பிரதேச மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

## 'கிளீன் ஸ்ரீலங்கா' அக்கரைப்பற்று ஆதார வைத்திசாலையில் மரம் நடுகை



(அக்கரைப்பற்று நிருபர்)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட 'கிளீன் ஸ்ரீலங்கா' தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக மரக்கன்று ஒன்றை நட்டு வைத்து ஆரம்பித்த நிகழ்வு (04) கடந்த சனிக்கிழமை காலை சுபநேரத்தில் அக்கரைப்பற்று ஆதார வைத்திசாலை யில் நடைபெற்றது.

வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐ.எம்.ஜவாஹிர் தலை மை யில் தேசிய கொடி ஏற்றலுடன் தேசிய கீதம் இசைக்கப் பட்டு நாடுக்காக உயிர்நீத்த தியாகிகளுக்காக செலுத்தப்பட்ட இரண்டு நிமிட மௌன அஞ்சலியையடுத்து வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் டொக்டர் ஐ.எம்.ரியாஸ் (திட்டமிடல்), டொக்டர் எஸ்.அகிலன் (சுகாதார தரநிர்ணய சேவை–தோற்றா நோய்), டாக்டர் எப்.எம்.ஏ.காதர் (பொதுச்சுகாதாரம்) மற்றும் வைத்திய அதிகாரிகளும், தாதிகள் மற்றும் சகல தரப்பு ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

## இளைஞர்-யுவதிகளுக்கு திட்டமுன்மொழிவுப் பயிற்சிகள்



(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

சமூக நலத் திட்டங்களை விஸ்தரிப்பதற்காக இளைஞர், யுவதிகளுக்கு திட்டமுன்மொழிவுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ வலுவூட்டல் நிறுவனத்தின் இளைஞர் அபிவிருத்தி வலுவூட்டல் செயற்றிட்ட இணைப்பாளர் அனுலா அன்ரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாவட்ட மட்ட இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு திட்ட முன்மொழிவுகளைத் தயாரிக்கும் இரு நாள் செயலமர்வில் பிரதான வளவாளராகக் கலந்து கொண்டு அவர் கருத்துத் தெரிவித்தார்.

அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ வலுவூட்டல் நிறுவனத்தினால் அமுலாக்கம் செய்யப்படும் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு சைல்ட் பண்ட் நிறுவனம் நிதி அனுசரணை வழங்குகின்றது.

பயிற்சிச் செயலமர்வை ஆரம்பித்து வைத்து இளைஞர் யுவதிகள் மத்தியில் திட்டத்தைப் அறிமுகம் செய்த அனுலா, இதுவரை காலமும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவுப் பிரதேச செயலாளர் பிரிவோடு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த சமூக நலத் திட்டங்களை மாவட்டத்தின் வேறு பகுதிகளுக்கும் விஷ்தரிக்க வேண்டும் என்று அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ வலுவூட்டல் நிறுவனத்திற்கு நிதி அனுசரணை வழங்கும் சைல்ட்பண்ட் நிறுவனம் கருதுகிறது.

அதற்கேற்ப, காலநிலையை அடிப்படையாகக் கொண்ட சிசிஜஆர் திட்டத்திற்காக கிரான் பிரதேச செயலாளர் பிரிவு தெரிவு செய்யப்பட்டு அங்கு செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்து வரும் திட்டம் முழுமையாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இளைஞர், யுவதிகளை ஒன்றிணைத்ததாக அமையப்போகிறது.

அக்ஷன் யுனிற்றி லங்காவும் சைல்ட்பண்ட் நிறுவனமும் இளைஞர்களுடைய அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளில் அதிக அக்கறை எடுத்து ஆர்வம் காட்டி வருகின்றது. அதனடிப்படையில் சமூகப் பங்கேற்பு சமூகப் பங்களிப்பு ஆகியவற்றில் மாற்று முகவர்களாக இளைஞர், யுவதிகளை உருவாக்குவது முன்னுரிமை நோக்கமாக அமைகிறது.

ஏனென்றால், இளையோர் சமூதாயத்தினரால் மட்டுமே சாதகமான சமூநல மாற்றங்களை துரித கதியில் கொண்டு வர முடியும். ஆகவே அதிக சாதக மாற்றங்களைக் கொண்டு வரும் மனித வளமாகவும் மனித வலுவாகவும் இளைஞர் யுவதிகள் கருதப்படுகிறார்கள்.

எனவே, அதனடிப்படையில் முதலில் இளைஞர்களால் ஏற்படும் மாற்றம் இளைஞர்களின் ஆக்கபூர்வச் செயற்பாடுகளினால் உண்டாக்கப்படும் சாதகமான மாற்றம் என்பவை கருத்திற்கொள்ளப்படுகின்றன.

அதனடிப்படையில், இளைஞர் கழகங்களை ஸ்தாபிப்பதனைக் கொண்டு இந்த செயற்பாடுகளின் துவக்கம் ஆரம்பிக்கிறது. பங்குபெறும் இளைஞர், யுவதிகளுக்கு பல்வேறு செயல்திட்டப் பயிற்சிகளை வழங்கி அவர்களை அறிவு, ஆற்றல், செயற்பாடு மிக்கவர்களாக மாற்றவுள்ளோம்" என்றார்.

## ஆரயம்பதியில் சங்காபிஷேக விழா



(ஆரையம்பதி நிருபர் )

மட்டக்களப்பு ஆரையம்பதி-03 வெள்ளை மணல் ஸ்ரீ அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் விநாயகர் விரதத்தை முன்னிட்டு இடம்பெற்ற 21 ஆம் நாள் காலை சங்காபிஷேக நிகழ்வு காலை 8:00 மணி தொடக்கம் மதியம் 11 மணி வரை சங்காபிஷேகம் இடம்பெற்றது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஹரிஹர சர்மா உட்பட உதவி குருமார்கள் சகிதம் பூஜைகள் இடம் பெற்றன.

## அஸ கியாஸிக்கு சேவை நலன் பாராட்டு




(றிஸ்வான் சாலிஜ்)

அக்கரைப்பற்று கோட்ட அதிபர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அக்கரைப்பற்று வலயக் கல்வி பணிமனையில் பிரதிக் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றி கல்விப் பணியில் இருந்து அண்மையில் ஓய்வு பெற்றுச் சென்ற அப்துல் அஸ கியாஸிக்கு சேவை நலன் பாராட்டு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (05) அக்கரைப்பற்று நீர்ப்பூங்கா வளாகத்தில் அதிபர் சங்க தலைவர் எம்.ஐ.எம்.உவைஸ் தலைமையில் நடைபெற்றது.

சுமார் 36 வருட காலம் ஆசிரியராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக தனது கல்விப்பணியில் அக்கரைப் பற்று மற்றும் அதனை அண்டிய பிராந்திய மாணவர்களுக்கு கல்விப்பணி செய்த நிகழ்வின் கதாநாயகன் அஸ அப்துல் கியாஸ் கோட்ட அதிபர்களினால் பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப்பா வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அக்கரைப்பற்று கல்வி வலயம் முதல் இவ்வூரின் கல்வி வளர்ச்சியிலும், இப்பிராந்திய மாணவர்களின் எதிர்கால வாழ்வியலிலும் அவரால் முடியுமான வரை இச்சமூகத்திற்கு உதவி செய்தார்.

இக்கல்வி வலயம் பல சாதனைகளை தேசிய ரீதியில் பெறுவதற்கு தன்னை முழுமூச்சாக அர்ப்பணித்தார். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ் மத்துல்லாஹ் கலந்து கொண்டதோடு, அக்கரைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.செய்னுடீன் உட்பட பாடசாலைகளின் அதிபர்களும் கலந்து கொண்டனர்.

# அரசியலை போல் ஊடகத்திலும் ஒழுக்கமின்மை

( எம்.ஏ.அமீனுல்லா )

நாட்டின் அரசியலைப் போன்று ஊடகத்திலும் ஒழுக்கமின்மை காணப்படுவதாகவும் சில ஊடகங்கள் மேற்கொள்ளும் பொய்ப் பிரசாரங்களால் மக்கள் அசௌகரியங்களுக்கு உளவாவதாகக் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

அதனால் , இந்த நாட்டில் பண்பாடற்ற அரசியலைப்போன்று , நெறிமுறையற்ற ஊடகங்களைச் சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான சாசனத்தை உருவாக்குவது, காலத்தின் கடடாயத்தேவையாக இருப்பதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.. கண்டியில் நேற்று முன்தினம் (4) ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அமைச்சர் கே.டி.லால்காந்த மேலும் கூறியதாவது:

அரசியலோ ஊடகமோ எதற்கும் இந்த நாட்டில் முறையான தர்மம் கிடையாது. ஊடக தர்மமின்றி சில ஊடகங்கள் மேற்கொள்ளும் பொய்ப் பிரசாரங்களால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஏதேனும் ஒரு தொழிலில் ஈடுபடும் ஒருவர் சட்டப்படி தவறு செய்தால், அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க மக்களுக்கு இடமளிக்க வேண்டும். ஊடகங்களால் இந்நாட்டு மக்கள் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் எண்ணற்றவை. பலாத்காரம், கொலைகள் என்று ஊடகங்கள் வெளியிடும் விதத்தைப் பார்த்தால் இது புரியும்.



சில சந்தர்ப்பங்களில், நீதிமன்றத் தீர்ப்புகள் எடுக்கப்படுவதற்கு முன்பே ஊடகங்களால் மக்கள் குற்றவாளிகளாக்கப்படுகிறார்கள். வீதியில் வாகனம் விபத்துக்குள்ளானால் பொலிஸார் , உரிய நடவடிக்கை எடுத்து, நீதிமன்றத்திற்கு உண்மைகளைத் தெரிவிக்கும் முன்னரே ஊடகங்கள் குற்றவாளியை முடிவு செய்யும் நிகழ்வுகளை நாம் பார்க்கிறோம். ஊடகங்கள் வேண்டுமென்றே பொய்யான செய்திகளைப் பரப்பும் சம்பவங்கள் எண்ணற்றவை. அவர்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இது மக்களின் உரிமையும் நமது பொறுப்பும் ஆகும். இந்த நாட்டின் சட்டங்கள் அனைவருக்கும் பொருந்தும். ஊடகவியலாளர்களுக்கான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாத நாடு இல்லை. இதற்குப் பத்திரிகையாளர்கள் ஒன்று கூடி ஒரு சாசனத்தை உருவாக்கி னால் அது சிறந்த விடயமாகும். ஒரு நாட்டை வழிநடத்தச் சட்டங்கள் அவசியம். இது பத்திரிகையாளர்களுக்கும் பொருந்தும்.

# நல்லதண்ணியில் 8 பேர் விசேட அதிரடிப்படையினரால் கைது

காட்மோர் பகுதியில் உள்ள வனப் பகுதியிலிருந்து கவரவில பகுதிக்குச் செல்லும் சமவெளி வனப் பகுதியில் 2 பெண்கள் 6 ஆண்கள் உட்பட 8 பேர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த காட்டுப் பகுதியில் அநாகரிகமாகச் செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் குறித்த எட்டு பேரை நல்லதண்ணி வனத் துறை அதிகாரிகள் மற்றும் அதிரடிப்படையினர், ஞாயிற்றுக்கிழமை (05) கைது செய்துள்ளனர்.

இதில் 25 - 30 வயது மதிக்கத்தக்க இரண்டு பெண்கள் 25 வயது முதல் 60 வயதுக்கு உட்பட்ட ஆறு ஆண்கள், வனப்பகுதியில் இருப்பதாகக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல்களைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற நல்லத்தண்ணி வனத்துறை அதிகாரிகள் மற்றும் அதிரடிப்படையினர் சந்தேகத்தின் பேரில் சாலாவ பகுதியில் உள்ள எட்டு பேரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் திருவெம்பாவைப் பாராயணம்

( பு.கஜிந்தன் )

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் 5 ஆவது வருடமாக நேற்று முன்தினம் திருவெம்பாவைப் பாராயணம் இசைக்கப்பட்டது. பரமேஸ்வரா ஆலயத்திலிருந்து ஆரம்பித்து கலட்டிச்சந்தி ஊடாக யாழ்.பல்கலைக்கழக பாலசிங்கம்





விடுதியினைக் கடந்து தபாற்பெட்டிச் சந்தி ஊடாக பரமேஸ்வராச்சந்தி வழியாக மீண்டும் யாழ்.பல்கலைக்கழகத்தைத் திருவுலா வந்தடைந்தது.

மேற்படி பாராயணத்தில் யாழ். இந்து மன்ற பெரும் பொருளாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான சி.ரமணராஜா , கலைப்பீட மாணவர் ஒன்றிய பெரும் பொருளாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான சு. கபிலன் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கொழுந்து பறிக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்குக் குடை



ஹொரண தோட்ட கம்பனியால் நிர்வகிக்கப்படும் ஸ்டோக்ஹோ ம் தோட்டத்தின் தோட்ட முகாமைத்துவ அதிகார சபை,தேயிலை கொழுந்து பறிக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்குக் குடை ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.தேயிலை தொழிலில் ஈடுபட்டுள்ள தோட்டத் தொழிலாளர்கள் வெயிலிலும் மழையிலும் தேயிலை கொழுந்து பறித்து வருவதாகவும் அவர்களை அவற்றி லிருந்து பாதுகாப்பதற்காகக் குறித்த தோட்டத்தின் தோட்ட அத்தியட்சகர் நதீர குணசேகர இந்த திட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக தோட்ட நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜே.ரொட்ரி கோ குறிப்பிட்டார்.

# கனடாவில் வவுனியா இளைஞர் பரிதாப மரணம்

( கி.வசந்தன் )



கனடாவில் கார் கதவு திறக்கப்படாமையி னால் அதிக நேரம் மூச்சுத் திணறல்ஏற்பட்டு பரிதாபமாகத் தமிழ் இளைஞர் ஒருவர் உயிரி ழந்த சம்பவம் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. வவுனியா, வீரபுரத்தைச் சேர்ந்த குறித்தஇளை ஞர் கனடாவில் வாழ்ந்து வருகின்றார். வெள் ளி க்கிழமை தேவைநிமிர்த்தம் வெளியில் சென்ற நிலையில் இவ் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது .

சம்பவத்தில் வவுனியா, வீரபுரத்தைச் சேர்ந்த ஜேக்கப் நெவில் டிலக்சன்(வயது20)என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# எந்த சவாலையும் எதிர்கொள்ளும் நிலையில் இலங்கை இராணுவம்

( எம்.ஏ.அமீனுல்லா )

**புதிய இராணுவத் தளபதி தெரிவிப்பு**

தேசத்தின் பாதுகாவலர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இலங்கை இராணுவம் எத்தகைய சவாலையும் எதிர்கொள்ளும் வகையில் பலமாக இருக்கின்றது.



யுத்தம் மட்டுமன்றி, எந்தச் சூழலிலும் இராணுவம் முன் வந்து சவால்களை எதிர்கொண்டு அவற்றை முறியடிக்க முடியும் என்றும், அது கடந்த காலப்பகுதியில் செயலில் நிரூபிக்கப் பட்டுள்ளதாகவும் புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ கண்டியில் தெரிவித்துள்ளார்.

தேவையான பயிற்சி மற்றும் ஆட்சேர்ப்பு முன்பு போல் தொடரும் என்றும் அவர் கூறினார்.

கண்டிக்கு நேற்று முன்தினம் (04) விஜயம் மேற்கொண்டிருந்த புதிய இராணுவத் தளபதி, தலதா மாளிகைக்குச் சென்று வழிபட்ட பின்னர், மல்வத்து மகா விகாரைக்குச் சென்று, பீடாதிபதி வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரை சந்தித்து, ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்.

பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த இராணுவ தளபதி, அங்கு மேலும் உரையாற்றுகையில் : ஜனாதிபதியின் எண்ணக்கருவில் உள்ள தூய்மையான இலங்கைத் திட்டத்தின் கீழ் இராணுவத்தினருக்கும் பாரிய பங்கு உள்ளதாகவும், இது வெறும் துப்புரவுப் பணிகளுக்கு அப்பால் மக்களின் மனோபாவத்தில் மாற்றத்தை உருவாக்கும் வேலைத்திட்டமாகும்.

மேலும் தலதா மாளிகையைப் பாதுகாப்பது எனது முக்கிய பணிகளிலொன்றாகும். இராணுவத்தினர் எமது காவல் துரையின் தெய்வங்களாவர். அவர்கள் மக்களுக்கான சேவைகளைச் செய்வதற்குத் தயாராக உள்ளனர் என்றார்.

# இளங்குமரன் எம்.பி சட்டத்தை கையில் எடுக்க முடியாது

( பு.கஜிந்தன் )

**யாழ். தொழிலதிபர் பரபரப்பு குற்றச்சாட்டு**

தமது வர்த்தக நிறுவனம் சட்ட ரீதியாகவே கண்ணக்கல் வியாபாரத்தில் ஈடுபடுவதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் உண்மையான விடயங்கள் தெரியாமல் தமது வர்த்தக நிறுவனத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியதாகவும் சிற்றி வன்பொருள் வர்த்தக நிறுவனத்தின் உரிமையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். அத்துடன் இச்சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தான் முறைப்பாடு பதிவு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் 65 வருட காலமாகக் கட்டப் பொருள் வியாபாரத்தைச் செய்து வருகிறோம். இவ்வாறான நிலையில் எமது நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனம் சுண்ணக் கற்களைத் திருகோணமலைக்குக் கொண்டு செல்லும் வழியில் சாவகச்சேரியில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் வீதியின் குறுக்காகத் தனது வாகனத்தை நிறுத்தி மறித்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்தும் வகையில் தனது வாகனத்தை எமது வாகனத்துக்கு முன்னால், பிரதான வீதியில் நிறுத்தி சாரதியை மிரட்டி வாகன திறப்பை வாங்கியமை சட்டத்துக்கு விரோதமான செயற்பாடு.

1992 ஆம் ஆண்டு 33 இலக்க சட்டத்தின் 28 (i)(2) பிரிவுகளின் பிரகாரம் எமது வாகனம் சுண்ணக் கற்களை எடுத்துச் சென்றது. முதலாவது பிரிவானது கனிய வளங்களை அகழ்வதற்கான அனுமதி, எடுத்துச் செல்வதற்கான வழி அனுமதிப்பத்திரம் என்பவற்றைப் பற்றிக் கூறுகிறது. அதன் பிரகாரம் கல் ஆலைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. கல் உடைக்கும் ஆலைகள் தமது வியாபார நிலையத்தைப் பதிவு செய்துள்ளார்கள். மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி பெற்றுள்ளார்கள் அதுமட்டுமல்லாது கனியவளத் திணைக்களத்தில் அனுமதி பெற்றுள்ளார்கள்.



நவீனத் தொழில்நுட்பத்தின் மூலம் கொழும்பிலிருந்து ஜி.பி.எஸ் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு சகல அனுமதிகளும் பெற்றவர்களிடமிருந்து நாம் கல்லை மட்டும் வாங்குகிறோம். நாம் கிடங்கு கிண்டுவதோ அல்லது கல்லை உடைப்பவர்களோ அல்ல.

முறைப்படி அனுமதி பெற்றவர்களிடமிருந்து பணம் கொடுத்து அவர்களின் கல்லை வாங்கி திருகோணமலைக்குக் கொண்டு செல்கிறோம். அதில் நாமும் சிறிய இலாபம் அடைவதோடு கல்லுடைக்கும் தொழிலாளர்கள் மற்றும் கல் ஆலைகளை நம்பி தொழில் செய்பவர்களின் வாழ்வாதாரத்தையும் நாம் பாதுகாத்து வருகிறோம்.

இலங்கைச் சட்டத்துக்கு உட்பட்டு எமது வியாபார நடவடிக்கைகள் அன்றிலிருந்து இன்றுவரை இடம்பெற்று வரும் நிலையில் இதை அறியாத சிலரின் தூண்டுதலின் பேரில் எமது நிறுவனத்தையும் எமது வியாபாரத்தையும் அபகீர்த்திக்கு உள்ளாக்கும் வகையில் இளங்குமரன் எம்.பி செயல்பட்டிருக்கிறார்.

நீங்கள் சட்டத்துக்கு உட்பட்டுச் செய்வதைச் செய்யுங்கள். இது எனக்கு ஆறுதல் அளித்தது. ஆகவே மாற்றத்தை விரும்பிய மக்களுக்கு ஏமாற்றத்தை வழங்குவது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல. எனவே தொழில் வழங்குநர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்காமல் செயல்படுமாறு பாராளுமன்ற உறுப்பினரைக் கேட்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மதவாச்சி பொருளாதார மத்திய நிலையம் மீள ஆரம்பிக்கப்படும்

**அமைச்சர் வசந்த சமரசிங்க**

மதவாச்சி பொருளாதார மத்திய நிலையத்தை மீள ஆரம்பிப்பது குறித்து ஆராய்வதற்காக வர்த்தகம், வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க நேற்று முன்தினம் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டிருந்தார். பொருளாதார மத்திய நிலையத்தின் தற்போதைய நிலை மற்றும் அதை மீளக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்கள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.



இந்த பொருளாதார மத்திய நிலையத்தை இங்கு ஆரம்பிக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து, மதவாச்சி பிரதேச செயலாளர் சந்திரிகா மலேவியாராச்சி அமைச்சருக்கு விளக்கமளித்தார். இதில் மதவாச்சி பாரளுமன்ற உறுப்பினர் சசந்த குமார நவத்தன்னவும் கலந்துகொண்டார்.

# கிணற்றில் தவறி விழுந்த குடும்பஸ்தர் மரணம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பங்கேணி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (05) காலை குளிக்கும் போது தவறுதலாக கிணற்றில் விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தும்பங்கேணி கிராமத்தை சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான 50 வயதுடைய தங்கராசா பரமானந்தம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நீர்நிலையில் வீழ்ந்து சனிக்கிழமை (04) உயிரிழந்த குழந்தையின் மரண வீட்டுக்கு சென்றுவிட்டு வந்து குளித்துக்கொண்டிருந்தபோது கிணற்றுக்குள் தவறி விழுந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

உடனடியாக பிரதேசவாசிகளின் உதவியுடன் அவர் பழுகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக களுவாஞ்சிகுடி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சொத்துத் தான பத்திரத்தை பெற்றோர்கள் இரத்து செய்யலாம்



## உயர் நீதிமன்றம் உத்தரவு

வயதான காலத்தில் பெற்றோரை பிள்ளைகள் கவனிக்காவிட்டால் சொத்துகளின் தான பத்திரத்தை இரத்து செய்யலாம் என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழு தீர்ப்பு வழங்கியுள்ளது. மத்தியப் பிரதேசத்தை சேர்ந்த பெண் ஒருவர் தன்னை கவனித்துக் கொள்ளாத மகனிடம் இருந்து தான் வழங்கிய சொத்துக்களை மீட்டுத் தர வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

மேலும் தான பத்திரத்தை இரத்து செய்ய வேண்டும் என்றும் தனது மனுவில் கூறியிருந்தார். இந்த மனுவை விசாரித்த மத்திய பிரதேச உயர்நீதிமன்றம், வயதான பெற்றோரை பிள்ளைகள் கவனிக்கவில்லை என்பதற்காக தான பத்திரத்தை இரத்து செய்ய முடியாது என்றும் அவ்வாறு கவனிக்க வேண்டும் என மனுதாரர் எந்த நிபந்தனையையும் பத்திரம் எழுதும்போது விதிக்கவில்லை என்றும் கூறி வழக்கை தள்ளுபடி செய்தது. இதை எதிர்த்து அந்தப் பெண் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த மனு மீதான விசாரணை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சி.டி.ரவிக்குமார் மற்றும் சஞ்சய் கரோல் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

மூத்த குடிமக்களின் உணர்வுகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சொத்துகளை எழுதி கொடுத்த பிறகு பெற்றோரை பிள்ளைகள் கவனிக்காமல் போவது மிகவும் கவலை அளிக்கிறது. இதுபோன்ற சூழ்நிலையில், பிள்ளைகள் கவனிக்காவிட்டால் அவர்களுக்கு பெற்றோர் எழுதி கொடுத்த சொத்து ஆவணத்தை இரத்து செய்யலாம். அந்த தான பத்திரத்தை செல்லாது என்று அறிவிக்க 2007 சட்டத்தின் பிரிவு 23 பெற்றோர் பராமரிப்பு, நல்வாழ்வு மற்றும் மூத்த குடிமக்கள் சட்டத்தில் இடம் இருக்கிறது. சொத்துகளை எழுதி வைத்தவருக்கு தேவையான அடிப்படை வசதிகள், உடல்ரீதியான தேவைகளை சொத்துகளை பெற்றவர் செய்ய வேண்டும். அப்படி செய்ய தவறினால், சொத்துகளை எழுதி கொடுத்தது செல்லாது என்று அறிவிக்க முடியும் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

# டில்லியில் தாமரை மலரும்

## பிரதமர் மோடி உறுதி



'டில்லி சட்டசபை தேர்தலில் பா.ஜ.க வெற்றி பெற்று, தாமரை மலரும்' என்று நம்பிக்கை வையுங்கள் என டில்லியில் நடந்த கூட்டத்தில் பிரதமர் மோடி தெரிவித்தார்.

டில்லியில் 12 ஆயிரத்து 200 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை நேற்று (05) பிரதமர் மோடி ஆரம்பித்து வைத்தார். அவர், மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்திற்கான புதிய அதிநவீன கட்டடத்திற்கும் அடிக்கல் நாட்டினார். பின்னர், நடந்த கூட்டத்தில் பிரதமர் மோடி கருத்து வெளியிட்டார். வளர்ச்சித் திட்டங்களைத் ஆரம்பித்து வைத்துள்ளேன். அடுத்த 25 ஆண்டுகள் இந்தியாவிற்கும், டில்லிக்கும் மிக முக்கியமானவை. இந்த ஆண்டுகளில் இந்தியா வளர்ந்த நாடாக மாறும். 25 ஆண்டுகளில் இந்தியா வளர்ந்த நாடாக மாற பங்களிப்பாளராக இருப்போம். டில்லி சட்டசபை தேர்தலில் தாமரை மலரும் என்று நம்பிக்கை வையுங்கள். டில்லியை வளர்ந்த இந்தியாவின், தலைநகராக நாம் உருவாக்க வேண்டும். இது எங்கள் கனவு. எனவே, டில்லியின் ஒளிமயமான எதிர்காலத்திற்காக பா.ஜ.க இற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று மக்களை வலியுறுத்தவே நான் இங்கு வந்துள்ளேன். கடந்த 10 ஆண்டுகளில் டில்லி மெட்ரோ ரயில் திட்டத்திற்கு பா.ஜ.க, கடுமையாக உழைத்தது. உலகின் 3ஆவது பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா மாறும். டில்லிக்கு இந்திய ரூபாய் 75,000 கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளது. இந்தியாவின் பாரம்பரியத்தின் மகத்தான வடிவத்தை வெளிப்படுத்தும் நகரமாக டில்லி இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம் என பிரதமர் மோடி தெரிவித்தார்.




# ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பரிசு; முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை எழும்பூரில் சிந்து வெளிப்பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று ஆரம்பித்து வைத்தார். இதன்பின் சிந்துவெளி பண்பாட்டை கண்டுபிடித்து உலகிற்கு அறிவித்த இந்திய தொல்லியல் கழகத்தின் மேனாள் இயக்குநர் சர் ஜான் மார்ஷல் சிலைக்கு அடிக்கல் நாட்டினார். இதை தொடர்ந்து நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கருத்து தெரிவித்தார்.

தமிழகத்தில் அமைந்துள்ளது ஒரு கட்சியின் அரசு அல்ல, இனத்தின் அரசு. சிந்துவெளி பண்பாடு தொடர்பான கருத்தரங்கு இந்தியாவில் வேறு எங்கும் நடைபெறவில்லை. சிந்துவெளி நாகரிகத்தில் திராவிட மொழி பேசப்பட்டிருக்கலாம் என கூறப்பட்டது. சிந்துவெளி நாகரிகம் முதன் முதலில் 1924ம் ஆண்டு உலகுக்கு அறிவிக்கப்பட்டது. சிந்துசமவெளி நாகரிகத்தை உலகிற்கு எடுத்துக்காட்டியவர் சர் ஜான் மார்ஷல். 1948ம் ஆண்டு காலத்தில் சிந்துவெளி அடையாளங்களை வெளிகொண்டு வந்தவர் அண்ணா. செம்மொழி மாநாட்டில் சிந்துவெளி நாகரிகத்தை அடையாளப்படுத்தியவர் கலைஞர் கருணாநிதி. சிவகங்கை மாவட்டம் கீழடி அகழாய்வு உலகை ஈர்த்துள்ளது. கீழடியைப் போலவே பொருணையிலும் அருங்காட்சியக பணிகள் நடைபெற்று வருகின்றன. சிந்துவெளி அகழ்வாராய்ச்சி பணிகள் உலக அளவில் கவனம் பெற்றுள்ளது. சிந்துவெளி குறியீடுகளும், கீழடி குறியீடுகளும் 60 சதவீதம் ஒத்துப்போகின்றன. சிந்துவெளி பண்பாட்டின் எழுத்து முறையை தெளிவாக புரிந்து கொள்ள உதவும் வழிவகையை கண்டறியும் அமைப்பு அல்லது நபருக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்படும். கல்வெட்டு ஆய்வாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் 2 அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கப்படும். தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் பெயரில்



ஆய்வு இருக்கை அமைக்க ரூ.2 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

## தமிழ்நாட்டில்

# குழந்தை பிறப்பு விகிதம் வீழ்ச்சி



கடந்த 2019ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் பிறப்பு விகிதம் அதிர்ச்சியூட்டும் வகையில் சரிவடைந்து கொண்டே செல்கிறது. 2019ஆம் ஆண்டுடன், 2024ஆம் ஆண்டினை ஒப்பிட்டால் 1 இலட்சத்து 3,880 குழந்தைகள் பிறப்பு குறைந்துள்ளது. தமிழ்நாட்டில் 7 கோடியே 21 இலட்சம் பேர் வசிக்கின்றனர். தேசிய அளவில் மக்கள் தொகையில் தமிழகம் 7ஆவது இடத்தில் உள்ளது. நாட்டின் சராசரி மக்கள் தொகை வளர்ச்சி 0.92% ஆக உள்ளது என ஐ.நா.சபை மற்றும் உலக வங்கி, இந்திய சுகாதாரத்துறை ஆகியவை கணித்துள்ளது. ஆனால் தேசிய சராசரியை விட நாட்டிலேயே அதிக அளவாக பீகாரில் 1.98%, உத்தரபிரதேசத்தில் 1.70%, மேகாலயாவில் 1.5%, மத்திய பிரதேசத்தில் 1.49% மக்கள் தொகை வளர்ச்சி உள்ளது. பொருளாதார வளர்ச்சியில் முன்னணியில் இருக்கும் மகாராஷ்டிராவில் 0.71%, மேற்கு வங்காளத்தில் 0.78% மக்கள் தொகை வளர்ச்சி இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் தென்மாநிலங்களான கேரளாவில் 0.22%, ஆந்திராவில் 0.61%, கர்நாடகாவில் 0.68%, தெலுங்கானாவில் 0.74% ஆகவும் இருக்கிறது. ஆனால் தமிழகத்தில் 0.30% மட்டுமே மக்கள் தொகை வளர்ச்சி இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. தேசிய சராசரியை விட இது மிக குறைந்த அளவாக இருக்கிறது. இருப்பினும் இந்த சதவீதம் இன்னும் குறைவாகவே இருக்கும் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் பிறப்பு விகிதம் அதிர்ச்சியூட்டும் வகையில் சரிவடைந்து கொண்டே செல்கிறது. கடந்த 2019ஆம் ஆண்டில் தமிழகத்தில் 9 இலட்சத்து 45,701 குழந்தைகள் பிறந்துள்ளனர். 2020ஆம் ஆண்டு 9 இலட்சத்து 39,783ம், 2021ஆம் ஆண்டில் 9 இலட்சத்து 12,864ம், 2022ஆம் ஆண்டில் 9 இலட்சத்து 36,367ம், 2023ஆம் ஆண்டு 9 இலட்சத்து 2,306 உம் உள்ளது. ஆனால் இதுவரை இல்லாத அளவாக 2024 ஆம் ஆண்டில் 8 இலட்சத்து 41,821 குழந்தைகள் மட்டுமே பிறந்துள்ளனர். இது, முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு மிக குறைந்த அளவாகும். அத்தோடு, குழந்தைகள் பிறப்பில் தமிழகம் மிகப்பெரும் வீழ்ச்சியை சந்தித்து இருப்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. அதன்படி 2019ஆம் ஆண்டுடன், 2024ஆம் ஆண்டினை ஒப்பிட்டால் 1 இலட்சத்து 3,880 குழந்தைகள் பிறப்பு குறைந்துள்ளது. இது 11 சதவீத சரிவு ஆகும். அதேவேளையில் 2024ஆம் ஆண்டினை 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டால் 60,485 குழந்தை பிறப்புகள் குறைந்துள்ளது. இது 6.71% வீழ்ச்சியே ஆகும்.

# முபாசா இந்தியாவில் ரூ.150 கோடி வசூல்




முபாசா திரைப்படம் இந்திய அளவில் ரூ.150 கோடி வரை வசூலித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. தி லயன் கிங் (The lion king) திரைப்படம் 2019 இல் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. உலகம் முழுக்க வசூலில் சாதனை நிகழ்த்திய தி ஜங்கிள் புக் படத்தை இயக்கிய ஜோன் ஃபவ்ரேதான் தி லயன் கிங் படத்தை இயக்கினார். லயன் கிங் படம் இந்தியாவில் ஆங்கிலம், ஹிந்தி, தமிழ், தெலுங்கு என நான்கு மொழிகளில் 2140 திரையரங்குகளில் வெளியாகி இந்திய ரூபாய் 178 கோடி வசூலித்தது. தற்போது 'முபாசா தி லயன் கிங்' படத்துக்கு ஜெப் நாதன்சன் திரைக்கதையில் பெர்ரி ஜென்கின்ஸ் இயக்கியுள்ளார். இது, 2019 இல் வெளியான தி லயன் கிங் படத்துக்கு முன்பும் பின்பும் நடக்கும் கதைகளை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தின் தமிழ் பதிப்புக்கு நடிகர் அர்ஜுன் தாஸ், நாசர், ரோபோ சங்கர், சிங்கம் புலி உள்ளிட்டோர் குரல் கொடுத்திருந்தனர். தெலுங்கு பதிப்பில் முபாசா கதாபாத்திரத்துக்கு நடிகர் மகேஷ் பாபுவும் ஹிந்தியில் நடிகர் ஷாருக்கான் அவரது மகன்களான ஆர்யன் கான், ஆப்ராம் கான் ஆகியோருடன் இணைந்து டப்பிங் செய்திருந்தார். இந்த நிலையில், இப்படம் உலகளவில் இந்திய ரூபாய் 3500 கோடியையும் இந்தியாவில் 150 கோடி இந்திய ரூபாய்க்கு அதிகமாகவும் வசூலித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மேல்மருவத்தூரில் பஸ் விபத்து; முப்பது பக்தர்கள் காயம்




கள்ளக்குறிச்சி அருகே மேல்மருவத்தூர் கோயிலுக்கு மாலை அணிந்து சென்று திரும்பிய பக்தர்கள் பயணித்த பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 30 பேர் காயமடைந்தனர்.

சங்கராபுரத்தைச் சேர்ந்த 54 பேர் மேல்மருவத்தூர் கோவிலுக்கு மாலை அணிந்து சுவாமி தரிசனத்திற்காக தனியார் பஸ்ஸில் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது கள்ளக்குறிச்சி மாவட்டம் அருத்தங்குடி புதூர் பகுதியில் பஸ் சென்று கொண்டிருந்த பொழுது பஸ் சாரதி சற்று கண் அயர்ந்ததால் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்தின் மீது பஸ் மோதி விபத்துக்குள்ளானது. உடனடியாக மின்சாரத் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட நிலையில், அந்த பகுதியில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. இதனால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. இருப்பினும் இந்த விபத்து சம்பவத்தில் 30 பக்தர்கள் காயமடைந்தனர். உடனடியாக அங்கு வந்த பொலிஸார் பொதுமக்கள் உதவியுடன் காயமடைந்த பக்தர்களை மீட்டு வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர்.

# பறவைக் காய்ச்சல் பாதிப்பு: சிறுத்தை, புலிகள் உயிரிழப்பு



மகாராஷ்டிரத்தின் நாக்பூர் நகரில் உள்ள கோரேவாடா விலங்குகள் மீட்பு மையத்தில் 3 புலிகளும் ஒரு சிறுத்தையும் பறவைக் காய்ச்சல் பாதிப்பில் பலியானதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மனிதர்கள் வசிக்கும் பகுதிக்கு விலங்குகள் அடிக்கடி சென்று தாக்குதலில் ஈடுபடுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில் சந்திரபூர் வனப்பகுதியில் இருந்து கோரேவாடா பகுதிக்கு பல விலங்குகள் மாற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து, கடந்த டிசம்பர் 20 அன்று ஒரு புலியும், டிசம்பர் 23 அன்று 2 புலிகளும் 1 சிறுத்தையும் பலியாகின. அவற்றின் உடற்கூறு மாதிரிகள் போபாலில் உள்ள தேசிய விலங்குகள் நோய் பாதுகாப்பு மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஜனவரி 1 அன்று வெளியான ஆய்வின் முடிவில் ஹெச்5என்1 வைரஸ் தாக்கி பறவைக் காய்ச்சலால் விலங்குகள் பாதிக்கப்பட்டு பலியானதாக தெரிவிக்கப்பட்டது. நோய் பாதிப்பின் காரணம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனைத் தொடர்ந்து, கோரேவாடா விலங்குகள் மீட்பு மையத்தில் உள்ள விலங்குகளுக்கு நடத்தப்பட்ட மருத்துவ சோதனையில் 26 சிறுத்தைகளும், 12 புலிகளும் ஆரோக்கியமாக இருப்பதாகக் கண்டறியப் பட்டுள்ளது. இறைச்சி உண்ணும் விலங்குகள் சில எதேனும் நோய் பாதிப்பு ஏற்பட்ட விலங்குகளை உண்டதால் இந்த பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என விலங்குகள் நல மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

# காஸாவில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல்; 21 பேர் உயிரிழப்பு

காஸாவின் கான் யூனிஸ், காஸா சிட்டி, டிர் அல் பலாக் உட்பட பல்வேறு பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 21 பேர் உயிரிழந்ததுடன் பலர் படுகாயமடைந்தனர். காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 பேர் உயிரிழந்தனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை காஸா முனைக்கு பணயக் கைதிகளாக ஹமாஸ் கடத்தி சென்றது. இதனையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் 117 பணய கைதிகளை உயிருடன் மீட்டது. அதேபோல், ஹமாஸ் ஆயுதக்குழுவினர்களால் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட பணய கைதிகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. ஆனால், 101 இஸ்ரேலியர்கள் ஹமாஸ் வசம் பணய கைதிகளாக உள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இதில், 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் எனவும் தகவல் வெளியாகியிருந்தது. அதேவேளை, ஓராண்டை கடந்தும் இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போர் நீடித்து வருகிறது. இந்த போரில் காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உட்பட 45,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். போரை நிறுத்தவும், பணய கைதிகளை



மீட்கவும் கட்டாரில் இஸ்ரேல், ஹமாஸ் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# உலகின் மிக வயதான ஜப்பானிய மூதாட்டி உயிரிழப்பு



உலகின் மிக வயதான மூதாட்டியாக அறியப்பட்ட ஜப்பானைச் சேர்ந்த டுமிகோ இடுகா தனது 116 ஆவது வயதில் காலமானார். உலகின் வயதான பெண் என கின்னஸ் அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டவர் ஸ்பெயின் நாட்டை சேர்ந்த பிரான்யாஸ் மொரேரா (117). இவர் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் உயிரிழந்தார். இதனையடுத்து, உலகின் மிக வயதான நபராக டுமிகோ இடுகா அங்கீகரிக்கப்பட்டார். இந்நிலையில், வயது முதிர்வு மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக டுமிகோ இடுகா தற்போது உயிரிழந்துள்ளார் என ஜப்பானின் தெற்கு நகர மேயர் ரியோசுகே தகஷிமா தெரிவித்தார்.

ஜப்பானின் வர்த்தக மையமான ஒசாகா அருகிலுள்ள அஷியாவில் இடுகா வசித்து வந்தார். அவருக்கு 4 வாரிசுகள் மற்றும் 5 பேரக் குழந்தைகள் உள்ளனர். கடந்த 2019 முதல் வைத்திய பராமரிப்பு நிலையத்தில் தங்கி இருந்த அவர், கடந்த மாதம் 29ம் திகதி மரணமடைந்தார். அமெரிக்காவில் போர்டு மாடல் டி அறிமுகப்படுத்தப்படுவதற்கு நான்கு மாதங்களுக்கு முன் அவர் 1908, மே 23ல் பிறந்தார். உலகப் போர்கள், தொற்றுநோய்கள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஏற்பட்ட காலத்தில் இடுகா வாழ்ந்தார். இவர் நிறைவான வாழ்க்கை வாழ்ந்தார் என இதுதொடர்பாக ரியோசுகே வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் கண்ணிவெடி தாக்குதல் : 4 பேர் பலி, 32 பேர் காயம்

பாகிஸ்தானில் நடைபெற்ற கண்ணிவெடி தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர். பாகிஸ்தான் நாட்டின் பலூசிஸ்தான் மாகாணம் டர்பெட் நகரில் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக சென்றுகொண்டிருந்த பஸ்ஸினைக் குறிவைத்து கண்ணிவெடி தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் பஸ்சில் பயணித்த 4 பேர் உயிரிழந்தனர். மேலும், 32 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மேலும், இந்த கண்ணிவெடி தாக்குதலை பலூசிஸ்தான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் நடத்தினரா? என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# உலகின் பழைமையான வைன்

ஸ்பெயினில் கடந்த 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பின்போது கண்டுபிடிக்கப்பட்ட கல்லறையில், ஆடைகள், கண்ணாடி பொருட்கள், நகைகள் மற்றும் 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்த வைன் (Wine) போன்ற பல்வேறு பாதுகாக்கப்பட்ட பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஸ்பெயினின் கார்மோனாவில் உள்ள தொல்பொருள் ஆராய்ச்சியின் போது, உலகின் பழமையான வைன் கண்டுபிடிக்கப்பட்டது.

உரோமானிய கல்லறையில் இருந்து பெறப்பட்ட இந்த பழங்கால வைன், சுமார் 2,000 ஆண்டுகள் பழமையானது என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு சீல் செய்யப்பட்ட இரும்பு கலசத்தின் உள்ளே ஒரு கண்ணாடி குடுவையினுள் அந்த வைன் பாதுகாக்கப்பட்டிருந்தது. முன்னதாக ஜேர்மனியில் இருந்து கிடைக்கபெற்ற 4ஆம் நூற்றாண்டு வைன் போத்தல் தான் உலகின் பழமையான வைன் என்று அறியப்பட்ட நிலையில், தற்போதைய கண்டுபிடிப்பு அதன் சாதனையை முடியடித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு புனரமைப்பின் போது கண்டுபிடிக்கப்பட்ட கல்லறையில் ஆடைகள், கண்ணாடி பொருட்கள் மற்றும் நகைகள் போன்ற பல்வேறு நன்கு பாதுகாக்கப்பட்ட பொருட்கள் இருந்தன. மேலும் அவற்றில் சீல் வைக்கப்பட்ட ஒரு கலசமும் இருந்தது, அதனுள் ஒரு கண்ணாடிக் குடுவையில் மது இருந்தது. அது, வைனை கசிவு மற்றும் பிற சுற்றுச்சூழல் பாதிப்புகளில் இருந்து பாதுகாத்து, அப்படியே வைத்திருந்தது. பேராசிரியர் ஜோஸ்



ரஃபேல் ஷுருயிஸ் அர்ரெபோலா தலைமையிலான கோர்டோபா பல்கலைக்கழகத்தின் வேதியியலாளர்கள், விரிவான பகுப்பாய்வுக்குப் பிறகு அதனை வைன் என உறுதி செய்தனர். அவர்களின் கண்டுபிடிப்புகள் தொல்பொருள் அறிவியல் இதழில் அறிக்கையாக வெளியிடப்பட்டுள்ளன.

# கொலம்பியாவில் பஸ் கவிழ்ந்து 13 பேர் பலி

கொலம்பியா நாட்டின் தென்மேற்கே அமைந்துள்ள நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த சுற்றுலா பஸ் விபத்துக்குள்ளானதில் 13பேர் உயிரிழந்தனர். வீதியின் வளைவில் திரும்பியபோது திடீரென கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் கவிழ்ந்த காரணத்தினாலேயே பஸ்ஸில் பயணம் செய்த 13 பேர் பரிதாபமாக பலியாகியதுடன் 20 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து அங்கு வந்த மீட்புக்குழுவினர் காயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதித்தனர். விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். கொலம்பியா நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் வீதி விபத்துகளால் 8,000 பேர் பலியாகிவருகின்றனர் என அந்நாட்டு போக்குவரத்து அமைச்சகத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# மலேசியாவுக்குள் நுழைய முயன்ற 200 அகதிகள் கைது

மலேசியாவின் கெடா மாகாண கடற்பகுதியில் அகதிகள் ஊடுருவ முயற்சிப்பதாக உளவுத்துறைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் 200 அகதிகள் கைது செய்யப்பட்டனர். மலேசியாவிற்குள் அதன் அருகிலுள்ள நாடுகளான மியன்மார், பங்களாதேக்ஷ் ஆகிய நாடுகளில் இருந்து ஏராளமானோர் சட்ட விரோதமாக நுழைகின்றனர். சமீப காலமாக இந்த எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது. இதனை கட்டுப்படுத்த எல்லை பகுதியில் மலேசியா அரசாங்கம் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளது. இந்தநிலையில் அங்குள்ள கெடா மாகாண கடற்பகுதியில் அகதிகள் ஊடுருவ முயற்சிப்பதாக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில் கடலோர பொலிஸார் அங்கு ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது அகதிகளை ஏற்றிக் கொண்டு வந்த 2 படகுகள் கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து படகில் இருந்த 200 அகதிகளையும் பொலிஸார் கைது செய்தனர்.



# தென் அமெரிக்காவில் உள்நாட்டு கலவரம் : அவசரகால நிலை பிரகடனம்

தென் அமெரிக்க நாடான ஈகுவடோரில் பல கிளர்ச்சி குழுக்கள் செயல்படுகின்றன. அவற்றில் பல ஆயுத கும்பலை பயங்கரவாத அமைப்பாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அவர்கள் பொதுச்சொத்துக்களை சேதப்படுத்துதல், அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்துவதால் அரசாங்கத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர். இதன் காரணமாக குவாயாஸ், லாஸ் ரியோஸ், மனாபி உள்ளிட்ட 7 மாகாணங்களில் உள்நாட்டு கலவரம் நிலவுகிறது. எனவே அந்த மாகாணங்களுக்கு இராணுவ அவசர நிலை பிறப்பித்து



ஜனாதிபதி டேனியேல் நோபோவா உத்தரவிட்டுள்ளார். மேலும் 20 மாகாணங்களில் இரவு நேர ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட முக்கிய பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர்.

## போர்டர் கவாஸ்கர் கிண்ணம்:

# 10 வருடங்களுக்குப் பின் அவுஸ்திரேலியா வெற்றி

அவுஸ்திரேலிய – இந்தியா அணிகளுக்கிடையிலான ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் கிண்ணத் தொடர் நேற்றுடன் நிறைவடைந்தது.
இதில் 6 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

இதன் பின்னர் மூன்றாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது. கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி ஆரம்பமான நான்காவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 184 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.
இதைத் தொடர்ந்து கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமான கடைசி மற்றும்





கடந்த நவம்பர் மாதம் ஆரம்பமான போட்டிகளில் முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 295 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து டிசம்பர் முதல் வாரத்தில் நடைபெற்ற 2வது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐந்தாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.
இந்த வெற்றியில் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியா அணி 3-1 என்ற விதத்தில் கைப்பற்றியது. இதன் மூலம் அவுஸ்திரேலியா அணி பத்து வருடங்களுக்குப் பிறகு பார்டர் கவாஸ்கர் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

# அவுஸ்திரேலியாவில் 46 ஆண்டுகால சாதனை முறியடிப்பு



அவுஸ்திரேலிய தொடரில் இந்திய அணியின் வீரர் ஒருவர் எடுத்த அதிகபட்ச விக்கெட்டுகள் 31ஆகும். அதை பிஷன் பேடி 1977-78 தொடரில் கைப்பற்றியிருந்தார்.
தற்போது, அதை 46 ஆண்டுகளுக்குப் பிறகு
இந்தத் தொடரில் மொத்தமாக 32 விக்கெட்டுகளை கைப்பற்றி ஜஸ்பிரீத் பும்ரா முறியடித்துள்ளார்.
அவுஸ்திரேலியாவில் ஒரு வெளிநாட்டு வீரர் எடுத்த அதிகபட்ச விக்கெட்டுகள் பட்டியலில் இங்கிலாந்தைச் சேர்ந்த மௌரிஸ் டாடே 38 விக்கெட்டுகள் (1924) முதலிடத்தில் உள்ளார்.
இந்தப் பட்டியலில் பும்ரா 10ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.
இன்னும் 7 விக்கெட்டுகள் எடுத்தால் அவுஸ்திரேயாவில் அதிக விக்கெட்டுகள் எடுத்தவர் என்ற உலக சாதனை நிகழ வாய்ப்பிருக்கிறது.




## உலக டேபிள் டென்னிஸ் தரவரிசையில்

# இலங்கைச் சிறுவன் சாதனை



உலக டேபிள் டென்னிஸ் தரவரிசையில் இலங்கையைச் சேர்ந்த 8 வயது தாவி சமரவீர, 11 வயதுக்குப்பட்டோர் பிரிவில் 11வது இடத்தைப் பிடித்து சாதனைப் படைத்துள்ளார்.
இவர் கொழும்பு கல்கிஸ்ஸை சென் தோமஸ் கல்லூரி மாணவராவார்.
வயது அல்லது பாலினத்தைப் பொருட்படுத்தாமல், இலங்கை டேபிள் டென்னிஸ் வீரர் ஒருவர் இதுவரை அடைந்த மிக உயர்ந்த உலக தரவரிசையாக இது கருதப்படுகிறது.
இந்த விடயம் நாட்டின் டேபிள் டென்னிஸ் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகவும் அமைகிறது.
இந்த சாதனைக்கு மேலதிகமாக, 13 வயதுக்குப்பட்டோர் பிரிவிற்கான உலக தரவரிசையில் தாவி 67ஆவது இடத்தையும் பிடித்துள்ளார்.

# நியூசிலாந்து 9 விக்கெட் வித்தியாசத்தில் இலகு வெற்றி





இலங்கை கிரிக்கெட் அணியின் நியூசிலாந்தில் சுற்றுப்பயணத்தில் தலா 3 போட்டிகள் கொண்ட ரி20 மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது.
இதில் முதலில் நடைபெற்ற ரி20 தொடரை நியூசிலாந்து 2-1 என்ற விகிதத்தில் கைப்பற்றியது.
இவ்விரு அணிகளுக்கு இடையே ஒருநாள் தொடர் நேற்று ஆரம்பமானது.
முதல் போட்டியில் நியூசிலாந்து அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.
முதலாவது ஒருநாள் போட்டி வெலிங்டனில் நேற்று நடைபெற்றது. இதில் நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி கலத்தடுப்பை தேர்வு செய்தது.
அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை வீரர்கள் ஆரம்பம் முதலே நியூசிலாந்து பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் தடுமாறினர். தொடக்க ஆட்டக்காரர் ஆன அவிஷ்க பெர்னாண்டோ மட்டும் ஒருபுறம் நிலைத்து விளையாட மறுமுனையில் விக்கெட்டுகள் சரிந்தன.
அவிஷ்க 56 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, பின் வரிசையில் ஜனித் லியானகே 36, ஹசரங்க 35 ஓட்டங்கள் அடித்து அணி ஓரளவு நிலையை எட்ட உதவினர். முடிவில் 43.4 ஓவர்களில் இலங்கை 178 ஓட்டங்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.
அபாரமாகப் பந்துவீசிய நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்ரி 4 விக்கெட்டுகளும், ஜேக்கப் டபி மற்றும் நாதன் சுமித் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.
இதனையடுத்து 179 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கிக் களமிறங்கிய நியூசிலாந்து அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்களாக ரச்சின் ரவீந்திரா – வில்யங் களமிறங்கினர்.
இருவரும் இணைந்து முதல் விக்கெட்டுக்கு 93 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர்.ரச்சின் 45 ஆட்டமிழந்தார்.
பின்னர் களமிறங்கிய சாப்மேன் நிதானமாக விளையாட, வில்யங் அதிரடியாக விளையாடி அணியை வெற்றி பெற வைத்தனர். 26.2 ஓவர்களில் 1 விக்கெட்டை மட்டுமே இழந்த நியூசிலாந்து 180 ஓட்டங்களை அடித்து எளிதில் வெற்றி பெற்றது.
வில்யங் 90 , சாப்மேன் 29 களத்திலிருந்தனர். மேட் ஹென்ரி ஆட்ட நாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

# தொடர் நாயகன் விருது பும்ராவுக்கு...

பார்டர் – கவாஸ்கர் டெஸ்ட் தொடரை இந்திய இழந்தாலும், தொடர் நாயகன் விருது பும்ராவுக்கு வழங்கப்பட்டது.
பொதுவாகத் தொடர் நாயகன் விருது என்பது வெற்றி பெற்ற அணியைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படும்.
உலகக் கிண்ணம் போன்ற சில தொடர்களில் மட்டுமே தொடர் நாயகன் விருது கிண்ணம் வென்ற அணியையும் தாண்டி சிறப்பாகச் செயல்பட்ட வீரருக்கு வழங்கப்படும். ஆனால், இரு அணிகள் பங்கேற்கும் தொடர்களில் பெரும்பாலும் வெற்றி பெற்ற அணியைச் சேர்ந்தவருக்குத் தொடர் நாயகன் விருது வழங்கப்படும்.
இந்த நிலையில், இந்தத் தொடரில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்குக் காரணமாக இருந்த கப்டன் பாட் கம்மின்ஸ் அல்லது துணை கப்டன் ட்ராவிஸ் ஹெட்டுக்கு தொடர் நாயகன் விருதை வழங்காமல் பும்ராவுக்கு அளித்திருப்பது அவுஸ்திரேலிய ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தி உள்ளது.
இந்த தொடரில் இந்திய அணி மோசமாக ஆடி தோல்விகளைச் சந்தித்த போதும் தலைசிறந்த பந்துவீச்சை வெளிப்படுத்தினார் பும்ரா. அவரது கிரிக்கெட் வாழ்வின் மிகச்சிறந்த பந்துவீச்சை அவர் வெளிப்படுத்தினார் என்பதே உண்மை.
ஐந்து போட்டிகளில் விளையாடிய அவர் 9 இன்னிங்க்ஸ்களில் மட்டும் பந்து வீசி 32 விக்கெட்களை வீழ்த்தினார்.
அவுஸ்திரேலியாவின் கப்டன் கம்மின்ஸ் 10 இன்னிங்ஸ்களில் 25 விக்கெட்களை வீழ்த்தி இருந்தார். அவர் துடுப்பாட்டத்திலும் ஓரளவு கை கொடுத்து 159 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.
அவருக்கும் கூட தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டு இருக்கலாம்.
அதே போல, துணை கப்டன் ட்ராவிஸ் ஹெட் 448 ஓட்டங்கள் குவித்து இந்த தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரராக இருந்தார்.
அவருக்கும் கூட தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டிருக்கலாம்.
ஆனால் அவர்கள் இருவரை விடவும் தனி ஆளாக இந்திய அணியைச் சுமந்த பும்ராவை பாராட்டும் வகையில் அவருக்குத் தொடர் நாயகன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி போட்டியில் அவுஸ்திரேலியா - தென்னாரிக்கா

பார்டர் கவாஸ்கர் கிண்ணத்தின் ஐந்தாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்த இந்திய அணி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெரும் வாய்ப்பை இழந்துள்ளது. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளி பட்டியலில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணியே இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும்.




நியூசிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகளைச் சொந்த மண்ணில் இந்திய அணி இழந்தது பாரிய பின்னடைவைக் கொடுத்தது. இந்த நிலையில் அவுஸ்திரேலியாலில் முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றதால் ரசிகர்கள் மத்தியில் நம்பிக்கை பிறந்தது.
ஆனால் அடுத்தடுத்த டெஸ்ட் போட்டிகளில் தோல்வியைத் தழுவியதன் மூலம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி போட்டி வைப்பை இழந்துள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளி பட்டியலில் தென்னாப்பிரிக்கா அணி 66.67 முதல் இடத்திலும், அவுஸ்திரேலியா அணி 63. 73 இரண்டாவது இடத்திலும், இந்திய அணி 50 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், நியூசிலாந்து அணி 48.21 நான்காம் இடத்திலும், இலங்கை அணி 45.45 ஐந்தாவது இடத்திலும் உள்ளன.
அவுஸ்திரேலிய அணிக்கு இரண்டு டெஸ்ட் போட்டிகள் இலங்கைக்கு எதிராக எஞ்சியுள்ளது. ஆனால் தற்போது இந்தியா தோல்வியைத் தழுவி இருப்பதால் அந்த டெஸ்ட் தொடர் சம்பிரதாய ஆட்டமாகத் தான் அவுஸ்திரேலியாவுக்கு இருக்கும். இந்திய அணிக்கு இனி எந்த ஒரு வாய்ப்பும் கிடையாது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 6ஆம் திகதி திங்கட்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.